திருவள்ளுவரின்

# மனித நேயம்



தமிழண்ணல்

திருக்குறள் உள்ளொளி விளக்கம்

குறள் வழி வாழ்வு

**செயல் நோக்குடன் எழுதப்பெறும் திருக்குறள் விளக்கம்**

மக்களுக்கும் மாணவர்க்கும் திருக்குறளைப்
பொருளுணர்ந்து கற்கப் பயன்படும் பயிற்சிக் கையேடு

திருவள்ளுவரின்

# மனிதநேயம்

தமிழண்ணல்

விற்பனையுரிமை

**மீனாட்சி புத்தக நிலையம்**

மயூரா வளாகம்
48, தானப்ப முதலி தெரு
மதுரை-625 001

முதற் பதிப்பு : திசம்பர் 2000,
கார்த்திகை, தி.பி.2031

உரிமை : நூலாசிரியரின் மக்களுக்கு

**விலை : ரூ. 12.00**

நூலைப் பற்றி

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | மனித நேயம் |
| ஆசிரியர் பெயர் | : | தமிழண்ணல் |
| நூலின் தன்மை | : | திருக்குறள் விளக்கம் |
| முதற்பதிப்பு | : | கார்த்திகை தி.பி.2031<br>திசம்பர் கி.பி.2000 |
| உரிமை | : | நூலாசிரியரின் மக்களுக்கு |
| தாளின் தன்மை | : | வெள்ளைத்தாள் |
| நூலின் அளவு | : | 18 x 12.5 செ.மீ. |
| மொத்தப் பக்கம் | : | 64 |
| நூலின் விலை | : | **12.00** |
| அச்சிட்டோர் | : | ஹேமமாலா சிண்டிகேட், சிவகாசி |
| ஒளி அச்சுக் கோர்வை | : | ஐ கேட்சர், மதுரை - 7. |

---

**சிந்தாமணிச் செல்வ வெளியீடு**

# திருக்குறள் ஊழியம்

*அன்பார்ந்த தமிழ் மக்களுக்கு,*

*வணக்கம்.*

*திருக்குறளுக்குத் தொண்டு செய்வதையே நோக்கமாகக் கொண்டு, இவ் 'ஊழியத்தை'த் தொடங்கினோம். சிறுசிறு திருக்குறள் விளக்கத் துண்டறிக்கைகளை வெளியிட்டுப் பரப்பினோம். பேராசிரியர் தமிழண்ணல் அவர்களை அணுகித் திருக்குறள் தொடர்பான சிறுசிறு விளக்க நூல்களும், 'கீதாசாரம்' என்பது போலத் 'திருக்குறட்சாரம்', 'திருக்குறட் பண்பாடு' 'குறள்வழி வாழ்வு', 'தன்னம்பிக்கைக் குறள்கள்' முதலாய துணித் தொங்கல்களும், திருக்குறட் பொங்கல் வாழ்த்துக்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், புத்தாண்டு வாழ்த்துக்கள் போல்வனவும் எழுதித்தர வற்புறுத்திக் கேட்டோம்!*

*எங்கள் வேண்டுகோளுக்கு இணங்கி, அவர்களும் நேரம் கிடைப்பதற்கு ஏற்ப, அவ்வப்போது எழுதி, வெளியிட்டுத் தருகிறார்கள்!*

*இவற்றைப் பரப்புவதையே தொண்டூழியமாகக் கொண்டுள்ள எங்களுக்கு மக்கள் எல்லா வகையான ஒத்துழைப்பும் தர வேண்டுகிறோம்!*

**இராம. நாகப்பன்**
**பா. அம்மையப்பன்**

கார்த்திகை, தி.பி.௨௦௩௧
திசம்பர், கி.பி.2000
திருக்குறள் ஊழியம்,
4 இலூர்து நகர் 7ஆம் தெரு,
கோ.புதூர், மதுரை 625 007.

# திருவள்ளுவ மாலை

என்றும் புலராது யாணர்நாட் செல்லுகினும்
நின்று அலர்ந்து தேன்பிலிற்றும் நீர்மையதாய்க் குன்றாத
செந்தளிர்க் கற்பகத்தின் தெய்வத் திருமலர்போன்ம்
மன்புலவன் வள்ளுவன்வாய்ச் சொல்.

இறையனார்

---

கடுகைத் துளைத்துஏழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்

இடைக்காடர்

---

அணுவைத் துளைத்துஏழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறிந்த குறள்

ஔவையார்

---

பொய்ப்பால பொய்யேயாய்ப் போயின; பொய் யல்லாத
மெய்ப்பால மெய்யாய் விளங்கினவே - முப்பாலில்
தெய்வத் திருவள்ளுவர் செப்பிய குறளால்
வையத்து வாழ்வார் மனத்து

தேனீக்குடிக் கீரனார்

---

மணல்கிளைக்க நீர்ஊறும்; மைந்தர்கள் வாய்வைத்து
உணச்சுரக்கும் தாய்முலை ஒண்பால்! - பிணக்குஇலா
வாய்மொழி வள்ளுவர் முப்பால் மதிப்புலவோர்க்கு
ஆய்தொறும் ஊறும் அறிவு

உருத்திரசன்ம கண்ணர்

## மனிதரை மாமனிதராக்கும்

# மனித நேயம்

உலகில் பசியின் கொடுமைக்கு இணையான கொடுமை பிறிதொன்றில்லை. அறிவியல் முன்னேற்றம் விண்ணைத் தொடும் இன்றும், உலகில் பசிக்கொடுமையால் இறப்போர் தொகை கூடிக்கொண்டே போகிறது.

**'இன்மையின் இன்னாதது யாது?' எனின்,**
**இன்மையின் இன்மையே இன்னாதது (1041)**

வறுமையைவிடக் கொடியது எது எனக் கேட்டால், வறுமையைவிடக் கொடியது வறுமையேயாம். அதாவது பசியைப் போன்று, நுகர்வதற்கு என்று எதுவும் இல்லாத நிலை, மிகமிகக் கொடியதாகும்.

**'பசி என்னும்தீப்பிணி'** (227) என்று, அதை ஒரு தீய நோய் என்பார் திருவள்ளுவர். அதை **'உள் நின்று உடற்றும் பசி'** என்பார் அவர். வெளியே தெரியாது; ஆனால் உள்ளே கனன்று எரியும்.

ஒருவர் நம்மிடம் ஒரு பொருளைக் கேட்டு வந்தால், 'நிரம்ப இருக்கிறது' (ரொம்ப இருக்கு) என்போம். அதாவது ஒன்றும் இல்லாததை அவ்வாறு மங்கலமாகச் சொல்வதுண்டு. 'நிரப்பு' என்று, வறுமையை உலக வழக்குச் சொல்லால் திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்.

**நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்**
**யாது ஒன்றும் கண்பாடு அரிது (1049)**

நெருப்பில் படுத்து உறங்கிவிடலாமாம்; உண்பதற்கு என எதுவும் கிடைக்காத வறுமையில், சிறிதளவு கண்ணயர்தலும் இயலாது.

<u>பாத்தூண் - பகுத்துண்ணுதல்</u>

தன்னிடமிருப்பதைப் பகுத்துக் கொடுத்துவிட்டு, மீதமிருப்பதை நாம் உண்ணவேண்டும். பாத்து - பகுத்து, ஊண் - உண்ணுதல். உண்டபிறகு பகுத்துக்கொடு எனச் சொல்வதானால், ‘உண்டுபின் பகுக்க’ எனல் வேண்டும்.

ஆனால் பகுத்துக் கொடுத்த பின் உண்ணச் சொல்லும் இத் தொடர் (பாத்தூண், பகுத்து உண்) தமிழர் நாகரிகத்தைக் காட்டுவது என்பார், மூதறிஞர் வ.சுப.மா. தமது வள்ளுவத்தில்.

இல்வாழ்க்கையன் பலருக்கும் பகுத்துக் கொடுத்துத் தானும் உண்டு வாழக் கடமைப் பட்டவன் என்பதைப் பல இடங்களில், பல விதங்களில் வற்புறுத்தக் காண்கிறோம்.

<u>சேமிப்பு வைப்பகம்</u>

செல்வத்தைச் சேர்ப்பவன், அம் மிகுதியான செல்வத்தை எங்கிருந்து தேடுகின்றான். தொழில் மூலமோ, வாணிகம் மூலமோ மற்ற எதன் மூலமோ சேரினும், அச் செல்வம் மக்களிடமிருந்தே, உலக மன்பதையாம் சமுதாயத்திடமிருந்தே பெறப்படுகிறது. அச் சமுதாயத்திலிருந்து பெறப்படும் அது, அம் மன்பதைக்கே பயன்பட வேண்டும்.

‘பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்து’, என்பது போலச் செல்வத்தை முடக்குவது, பதுக்குவது, ஒளிப்பது (கரப்பது) தவறு என்பது வள்ளுவக் கொள்கை.

ஒருவன் மிகுசெல்வம் பெற்றால், அச் செல்வத்தை அவன் **'வைப்பு நிதி போல'**ச் சேமித்து வைக்கவேண்டிய இடம் எது? பசித்தவன் வயிற்றிலே உணவாகத் தந்து சேமிக்க வேண்டுமாம்.

**'அற்றார் அழிபசி தீர்த்தல்' அஃதுஒருவன்**
**பெற்றான் பொருள் வைப்புழி** (226)

செல்வம் பெற்றவன் அதைச் சேமித்து வைக்கும் இடம், ஒன்றுமற்றவர்களது, 'அழிபசியை' (அழித்துக் கொல்வது போன்ற அத்துணைக் கொடிய பசியைத்) தீர்ப்பதேயாகும்.

தன் தேவைக்குப் போக, எஞ்சியதை உலகிற்கு வழங்கிவிட வேண்டுமாம். இம் மனநிலை வாய்த்துச் செயலுக்கும் வந்தால்,உலகில் கொலை, களவு முதலியன அறவே ஒழியுமல்லவா?

செல்வத்தைச் சேமிக்குமிடம், பசித்தவன் வயிறு என்பது, எத்துணை நுண்பொருட் சிந்தனை !

செல்வம் குவியக் குவிய, அதைக் கருவூல அறைகளில், மறைமுக வழிகளில், வங்கிகளில், மாற்றவர் பெயர்களில் சேமிக்க முந்துவது மனித மனம். அதனை உணர்ந்து, இருப்பவர்கள் தம்மிடம் கூடுதலாக இருப்பதை, இல்லாதவர்களுக்கு ஏதோ ஒரு வகையில் வழங்கப் பழக வேண்டுமென்பதே இதன் விளக்கமாகும்.

பிறர் பசியைப் போக்குவதைத் திருவள்ளுவர் போற்றும் முறையே தனி. சிலர் தமது பசியை அடக்கி வாழ்வதைப் பெருமையாகக் கூறுவர். திருவள்ளுவர் பிறர்

பசியைப் போக்குபவனுக்கு அடுத்தபடிதான் தன் பசியை அடக்குபவன் சிறப்படைகிறான் என்று கூறுகிறார்.

**ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை**
**மாற்றுவார் ஆற்றலின் பின்** (225)

தம் பசியை ஆற்றுபவர்தம் பசி அடக்கும் ஆற்றல் பெரிதுதான்; ஆனாலும் பிறரது பசியை, உணவு தந்து போக்குகின்றவரது ஆற்றல் அதைவிடப் பெரிது. அதாவது இதற்கு அடுத்தபடிதான் துறவியரது பசியடக்கும் முறையையும் கூறமுடியும் என்பது கருத்து.

பிறர் பசியைத் தீர்க்க வேண்டுமேல் உழைத்துப் பொருள்தேட வேண்டும். தேடியதைத் தொகுத்துக் காத்துப் பின்பு பகுத்துக் கொடுத்துப் பசி தீர்க்க வேண்டும். இதனால் அவன் மன்னுயிர்க்கு அன்பனாகின்றான்; துறவியைவிட மேலாகின்றான்.

**யாவர்க்குமாம் இறைவற்கு ஒரு பச்சிலை**
**யாவர்க்குமாம் பசுவுக்கொரு கையுறை**
**யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி**
**யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே** (419)

இத் திருமந்திரக் கருத்து, பிறர்க்கும் பிறவுயிர்கட்கும் தந்து, தான் உண்டு வாழ்வதே மாந்தநேயமாகும் என்பதாகும்.

**'கொல்லாமை'** அதிகாரத்தில், ஒன்பது குறள்கள் கொலை செய்வதன் தீங்கையே கூறுகின்றன. ஒரே ஒரு குறள் சற்று வேறுபடக் காணப்படுகிறது.

**பகுத்துஉண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்**
**தொகுத்தவற்றுள் எல்லாம் தலை (322)**

செல்வன் தனது உடைமையைப் பகுத்துக் கொடுத்துப் பிறகு தானும் உண்டு, உலகிலுள்ள பல உயிர்களையும் போற்றிக் காக்கவேண்டும். இதுவே உலக நூல்வல்லார் தொகுத்துக் கூறிய அறங்கள் அனைத்திலும் தலையாயதாகும். (ஓம்புதல் - பேணிப் பாதுகாத்தல்)

அவ்வாறு பகுக்காமல், பதுக்கினானால் அவன் பிறர் பங்கை ஒளித்துவைத்து, அதன்மூலம் அவ்வுயிர்கள் பசியால் வறுமையுற்று வாடிச் சாவதற்குக் காரணமாகின்றான். எனவே அவனைக் 'கொலையாளி' என்றே கருதி, 'கொல்லாமை' அதிகாரத்தில் அவன் அக் கொலைக் குற்றத்தினின்றும் விடுபட, இவ்வாறு அறநெறி காட்டுகிறார்.

**இன்றேல் 'கொல்லாமை' அதிகாரத்தில் இக்குறள் இடம்பெறுவானேன்?**

குறளறிவு முற்றப் பெறாத, சிற்றறிவுச் சிறியோர், இன்று இந்நூற் கட்டமைப்பைச் சிதைத்துச் சீர் குலைக்கின்றனர். அவர் கண்களில் இக்குறள் படாது தப்பிக்க வேண்டும்.

இக் குறளின் நுண்பொருட் கருத்து மிக ஆழமானது. காரல் மார்க்சுக்கு முன்பே, இத்துணை அரிய செயதியைத் திருவள்ளுவர் கூறியுள்ளார்.

**பல்லுயிர்க்குப் பகுத்துண்ணாது செல்வத்தைப் பதுக்குதலும், கொலைக்குச் சமமே** எனுமிது எவ்வளவு நுட்பமான **பொருளியல் சிந்தனை** என உணர்தல் வேண்டும்.

<u>உலகியல்</u>

திருவள்ளுவர் **'உலகியல்'** சார்ந்த சிந்தனையாளர். உலகியலுக்கு அப்பாற்பட்ட கற்பனைகளில் மிதந்து, 'எட்டாக் கனிகளுக்குக்' கொட்டாவிவிட வைப்பது அவர் நெறியன்று. உலகில் ஏழ்மை, வறுமை, பசித்துன்பம் என்றும் இருக்கிறது. ஏற்போரும் ஈவோரும் ஈயாது மறைப்போரும் காணப்படுதல் உலக இயற்கை. இவை அற்ற நிலையை அடைவதே மனிதனின் குறிக்கோள். 'எல்லோர்க்கும் எல்லாம் என்று இருப்பதான, இடம் நோக்கி நடக்கின்றது இந்த வையம்', என்ற பாவேந்தர் பாரதிதாசன் பாடலின்படி, அத்திசை நோக்கி நடப்பதென்பது உண்மையே. அதுவோ அடிவானம் போன்றது. எனவே, உலகியலிற் காணும் 'இரத்தல்' (யாசித்தல்) பற்றிச் சிந்தித்த திருவள்ளுவர், இரத்தல் கூடாது என எச்சரித்து, மான உணர்வைத் தூண்டும் **'இரவச்சம்'** என்ற அதிகாரத்தை வைத்துள்ளார். அதற்கு முன்பு **'இரவு'** என்ற அதிகாரத்தையும் வைத்துள்ளார். இரந்துண்ணும் நிலை எக்காலம் வரை தவிர்க்கவொண்ணாததாக இருக்கிறதோ, அன்றுவரை அதை ஏற்றுத்தான் ஆகவேண்டும். நேரிய வழியில், இரந்துண்ண நேரிட்டால் அது தவறன்று. **'இரத்தலும் ஈதலே போலும்'** என்றார், கொடுப்பவர்க்கு மகிழ்ச்சியை - ஈத்துவக்கும் இன்பத்தைத் தருதலால் !

மறைக்காது தரும் கொடையாளிகள் முன் நின்று **'இரப்பும் ஓர் ஏஎர் உடைத்து'** (யாசித்தலும் ஓர் அழகை உடையதாகிறது) என்றார். **'இன்பம் ஒருவற்கு இரத்தல்'** என்றார், கேட்டது துன்பமின்றிக் கிடைத்தால்!

இவை யாவும் மனித இனத்தின் ஒட்டுமொத்தமான, **'மன்பதை உளவியல்'** அடிப்படையிலான, மனிதநேயக் குறள்களாகும்.

'எனக்கு அன்று; என் பசுமாட்டிற்குத் தண்ணீர் வேண்டும்' என்றுகூட இரத்தல் கூடாதாம். அதனால் அவ்வாறு கேட்ட நாவிற்கு இழிவு ஏற்படுமாம் (1066). பழங்கஞ்சியிலிருந்து வார்த்த 'நீராகாரம்' மட்டுமே உணவாக உளதெனினும், அது தன்முயற்சியால் பெற்றதாயின், அதை உண்டு வாழ்வதிலும் இனிமை தருவது பிறிதில்லை என்பார் திருவள்ளுவர்.

**தெண்ணீர் அடுபுற்கை யாயினும் தாள்தந்தது**
**உண்ணலின் ஊங்குஇனியது இல்** (1065)

தாள்தந்தது - தன்முயற்சியால் கிடைத்தது. அடுபுற்கை - சமைத்த சோறு. தன்முயற்சியை இத்துணையளவு வற்புறுத்தும் திருவள்ளுவர், அதற்கு அப்பால் 'இரத்தல்' (கையேந்திக் கேட்டு வாழ்தல்) எனும் நிலை ஒன்றும் உலகில் இருக்கக் கண்டார். அந்நிலையில் இரத்தலும் தக்கதே; கரவாது உவந்து ஈபவரிடம் இரந்து வாழ்க என, மனித நேயத்தின் எல்லையில் நின்று கூறுகிறார்.

ஆனால், அதற்காக **இரத்தலை ஓர் அறமாக ஆக்கிவிடக்கூடாது;** சிலர் செய்வதுபோல் **ஒரு தொழிலாக நடத்தக்கூடாது. 'நல் ஆறு எனினும் கொளல்தீது'** என்பது அவர் சொல்லும் படிப்பினை (222).

சில சமயங்கள் 'ஒருவன் பிச்சை எடுக்கின்றான் என்றால், அது அவன் தலைவிதி' என்றன. 'என்ன

செய்வது? அவன் செய்த 'கர்மா' அவனைப் பிச்சை எடுக்கவைத்துவிட்டது. இறைவன் இட்ட விதி அது. அதை மாற்றமுடியாது. இவ்வாறு இறைவன் சிலரைத் 'தாமச குணத்தோடு' படைத்து, தொண்டு செய்து, இழிகுலமாய்க் கையேந்தி வாழவைத்தான். இவை அவனவன் 'கர்மா'வுடன் நடப்பன; இறைவனாலும் மாற்ற முடியாதன' என்றனர். இதைக் கேட்ட, திருவள்ளுவர், அறம் சார்ந்த சீற்றத்துடன் கீழ்வருமாறு கூறுகிறார்:

**இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து**
**கெடுக உலகு இயற்றியான் (1062)**

உலகைப் படைத்தவனே, 'இரந்துதான் ஒருவன் உயிர் வாழவேண்டுமென விதித்துப் படைத்திருப்பானேல், (அவ்விறைவன் அவ்வாறு படைக்கமாட்டான். அல்லாமல் நீங்கள் சொல்வதுபோல் படைத்திருப்பான் என்பது உண்மையானால்) அவ்விறைவனும், இவ் இரவலனைப்போல, அலமந்து திரிந்து பிச்சையெடுத்துக் கெடுவானாக! இவ்வாறு கூறுவது, அக் கருத்துடையாரை மறுப்பதற்கேயாம். 'இரவச்சம்' என்ற அதிகாரத்தில் வரும் இது, மனிதன் முயன்று வாழவேண்டும், வாழமுடியும் என்ற நோக்குடையது.

**படிநிலை அறம்**

திருவள்ளுவர் எவ்வளவு கீழ்நிலையிலுள்ளவரும் முன்னேற வழிகாட்டுபவர். முயற்சியிருந்தால் எதையும் அடையலாம் என வழிகாட்டுபவர். எண்ணம்தான் வெற்றியாக உருவெடுக்கும். எனவே உன் உள்ளத்தை நெறிப்படுத்து; பதப்படுத்து; நிலைப்படுத்து எனக்கூறி,

மனிதனின் தன் முயற்சிக்கு நூல் முழுவதும் வழிகாட்டுபவர். திருக்குறளைப் போலத் ‘தன்னம்பிக்கைக்கு’ வழிவகுத்த நூல், மிகச்சிலவேயாகும்.

மனிதனிடம் **அகவாழ்வு, புறவாழ்வு** என இரண்டு உள. இரண்டும் சங்கமிக்கும் இடமே பெருமிதப் பெருவாழ்வு.

மாந்தரின் ‘அகவாழ்வை’ச் செம்மைப் படுத்தவே, அவர் பெரிதும் முயல்கிறார். மனத்தால் நிகழும் அகவாழ்வின் வெளிப்பாடே புறவாழ்வு. அகவாழ்வு இன்றிப் புற வாழ்வென ஒன்றில்லை. எனவே அகவாழ்வின் சீர்மையையும் செம்மையையும் உருவாக்கிப் புறவாழ்வில் ஒருவர் தலைநிமிர்ந்து, ‘ஏறுபோல் பீடுநடை’ போட வழிகாட்டுகிறார்.

புறவேடங்கள், தோற்றங்கள், வாழ்வுவகைகள் இவற்றில் கூடுதலான அழுத்தம் வைக்காமல், மனித உள்வியலும் உலகியலும் அறிந்து, **மாந்தருட் சிறந்த மாந்தராக** மாமனிதராக வழிகாட்டிவிட்டதால், திருக்குறள் என்றும் நிலைபேறுடையதாகிவிட்டது.

**புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறலரிதே**
**ஒப்புரவின் நல்ல பிற. (213)**

ஒப்புரவு, ஒருவர் தம் செல்வத்தை எல்லோர்க்கும் பயன்படுமாறு செய்து பொதுநலம் பேணுவது. எல்லோரும் எல்லாம் எய்தி வாழ்வதாகக் கற்பனை செய்யப்படும் மேலுலகத்தில் அதற்கு இடமில்லை; இவ்வுலகிலோ அது போன்றது பிறிதில்லை.

**புலத்தலின் புத்தேள்நாடு உண்டோ, நிலத்தொடு**
**நீர் இயைந்தன்னார் அகத்து (1323)**

நிலமும் நீரும் இணைந்தது போன்று சேர்ந்த காதலர்கள் தம்முள் புலவி எனப்படும் சிறுசிறு ஊடல்களினால் பெறும் இன்பம் போன்ற மேலுலகம் (சொர்க்கம்) வேறு உண்டோ?

இக் குறள்கள் துறக்கவுலகமென்று கூறி, எல்லா இன்பங்களும் அங்கே உண்டென்பாரைப் பார்த்து, ''துறக்கம் (சொர்க்கம்) என்னடா பெரிது? இங்கே இல்லாத நலம், இன்பம் அங்கே என்னடா இருக்கிறது? நீ நினைத்தால் இங்கேயே அந்த இன்பங்களையெல்லாம் பெற்று வாழலாமே!'' என மாந்தரை ஊக்கப்படுத்துகின்றன.

**'செத்த பிறகு சிவலோகம், வைகுந்தம் சேரலாம் என எண்ணியிருக்கும்'** பித்துப் பிடித்த மனித குலத்திற்கு இவ்வுலகிலேயே அவ்வின்பமனைத்தையும் இன்றே, இனிதே பெற்று வாழலாம் என வழிகாட்டுவதே வள்ளுவம். ஒவ்வொரு குறளிலும் இம் மானுட வாழ்வின் மேன்மை பாலிற்சுவைபோல் பரவி, ஊடுருவிக் கிடக்கிறது.

**<u>பெரியோர் துணை</u>**

வாழ்க்கையில் ஒருவர் எவ்வளவு திறமையுடையவராக இருந்தாலும், கைதூக்கிவிடத் தம்மைவிடப் பெரியவர்கள், உயர்ந்த பதவியிலிருப்பவர்கள், செல்வாக்கு மிக்கவர்கள், செல்வச் செழிப்பு மிக்கவர்கள், கல்வித்துறையில் கரைகண்டு உலகோரால் மதிக்கப் பெற்றவர்கள் என

இத்தகையவர்களில் யாருடைய உறுதுணையாவது வேண்டும்.

தன்னம்பிக்கையுடையவராய்த் தன் முயற்சியாலும் ஒருவர் மேலே ஏறிவிட முடியும். ஆனால் இத்தகைய பெரியவர்கள் துணையுமிருந்தால், 'மலையுச்சியிலும்' ஏறுவது எளிதாகும். சில சமயம் திறமை மட்டுமே போதும். அமெரிக்க நாட்டில் திறமை, உழைப்பு ஆகிய இவையிருந்தால், யாருடைய பரிந்துரையும் வேண்டாம். அங்கும் 'துணை' தேவைப்படும் இடங்கள் பலவுள. வழிகாட்டவும் வழிநடத்தவும் நல்லவர் துணை கிடைக்கப் பெற்றவர்கள் எளிதில் மேன்மேலும் உயர்வர்.

நம் நாட்டிலோ எவ்வளவு திறமையும் உழைப்புமிருந்தாலும் 'கைதூக்கிவிட' ஆளின்றேல், அவர்கள் அங்கங்கே தேங்கிப் போய்விடுகின்றனர்.

அரசர், ஆள்வோர் மற்றும் அனைவருக்கும் 'பெரியாரைத் துணைக்கொள்ளுதல்' மிகுந்த கட்டாயத் தேவை என்பதை மறுக்கவியலாது. அந்தத்துணை **'அரியவற்றுள் எல்லாம் அரிது'** என்றும், **'வலிமையுள் எல்லாம் தலையாய வலிமை'** என்றும் திருவள்ளுவர் கூறுகிறார், அத்தகைய பெரியோர் துணை - ஆதரவு - பரிந்துரை இன்மையால் பட்டம், பதவி, செல்வம், செல்வாக்கில் தேங்கிப்போனவர்கள் இதை நெஞ்சார உணர்வர்.

**அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப்**
**பேணித் தமராக் கொளல்** (443)

**தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்**
**வன்மையு ளெல்லாம் தலை** (444)

பெரியவர்களைத் தேடிப்போய் போற்றித் தம்முடையவராக ஆக்கிக் கொள்ளுதல், அரியன எனப்படும் ஒருவர்தம் முயற்சிகளிலெல்லாம் அரிதாகும். தம்மைவிடப் பெரியவர்களைத் தம்முடையவர்களாக ஆக்கிக்கொண்டு வாழ்வது, ஒருவருக்கு வலிமைகள் எல்லாவற்றிலும் தலையாய வலிமையாகும்.

அது மட்டுமா? ஒருவருக்கு எந்த அளவு, ஏன், எவ்வாறு பெரியவர்களாம் சான்றோர்களின் துணை வேண்டும் என்பதற்கும் அத்தகைய துணைமட்டும் இருந்தால் ஒருவர் எங்ஙனம் வாழ்வில் நிலைபெறலாம் என்பதற்கும் திருவள்ளுவர் ஓர் உவமையைக் கூறி விளக்குவதையும் காண்கிறோம்.

**முதலிலார்க்கு ஊதியம் இல்லை; மதலையாம்**
**சார்பிலார்க்கு இல்லை நிலை (449)**

முதல்போட வழியில்லாத வணிகர்களுக்கு, அதனாலாம் ஊதியம் இல்லை. அதுபோலத் தம்மைத் தாங்கவல்ல பெரியவர்களின் சார்பில்லாதவர்களுக்கு அதனாலாம் நிலையான வாழ்வும் இல்லை.

மதலையாம் சார்பு - பெரியவர்களின் தாங்கவல்ல துணை. மதலை - கட்டிடத்தைத் தாங்கும் உத்தரம். வாழ்வில் நிலைபெறுதலும் முன்னேறுவதும் பெரியவர்களின் துணையால் எளிதில் நிறைவேறும். என்னதான் திறமையிருந்தாலும் பெரியவர்களின் நற்சான்றும் பரிந்துரையும் தேவைப்படுகின்றனவே!
(திருக்குறள் நுண்பொருளுரை)

திறமை, அறிவு, தன்னம்பிக்கை, தன்முயற்சி - இவற்றையெல்லாம் வலியுறுத்திய திருவள்ளுவர், அவையே போதுமென நிறுத்தாமல், இத் 'துணை' பற்றியும் கூறியிருப்பது அன்றும் இன்றும் என்றும் உலகியலின்படி உடன்பட வேண்டிய ஒன்றுதானே? மாந்தர் முன்னேற வேண்டுமென, உண்மையான பற்றுதலோடு, அவனைக் கைதூக்கிவிடத் திருவள்ளுவர் மேற்கொள்ளும் முயற்சி தென்படுகிறதல்லவா?

## தெய்வத்தின் துணை

முழுமுதற் கடவுள் வேறு; தெய்வம் வேறு. இயற்கை தெய்வம். ஐம்பூதங்கள் (நிலம் நீர் வான் காற்று நெருப்பு) தெய்வம். ஞாயிறு, மதியம், கோள்கள் இன்னபிறவும் தெய்வம். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்தவர்களை வானுறையும் தெய்வமென வழிபடுவர். தன்னீகம் செய்து 'நடுகல்'லானவர்கள் தெய்வமாக வழிபடப் பெற்றனர். கண்ணகியைத் **'தெய்வம் தொழுமின்'** என அழைத்தார் இளங்கோவடிகள். **'வழிபடு தெய்வம் நிற்புறங் காப்ப, பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து வாழ்க'** என்பது, தொல்காப்பியம் கூறும் புறநிலை வாழ்த்து (செய்.106).

இது மானுட நம்பிக்கையின்பாற் பட்டது. நம்பிக்கை மனத்திண்மையைத் தரும். மனஉரம் எண்ணிய வாழ்வைத் தரவல்லது.

பெரியோர் துணைபோலத் தெய்வத்தின் துணையும் வேண்டும். ஆனால் இவை தன்முயற்சி, உழைப்பு உடையவர்க்கே வாய்க்கும். தெய்வம் தானாகத் தருமென்பது நல்ல நம்பிக்கை ஆகாது. 'தெய்வம் காட்டும்;

ஊட்டுமா' என்பது பழமொழி. தன்னம்பிக்கையும் தன் முயற்சியுமே முன்னேற்றத்தின் அடித்தளம். அதனோடு பெரியோர்களையும் ஒருவன் 'பேணித் தமராகக்' (தம்முடையவராகக்) கொள்ள வேண்டுமென்பதே வள்ளுவம்.

**'குடிசெய்வல்' என்னும் ஒருவற்குத் தெய்வம்**
**மடி தற்றுத் தான்முந் துறும்** (1023)

'குடிசெய்வல்' என்றால், 'என் குடியை உயர்வடையச் செய்வேன்; தளர்ந்த குடியை வளர்த்துச் சிறப்புச் சேர்ப்பேன்' என்றெல்லாம் சூள் உரைத்து, உறுதியுடன் உழைத்தல். அங்ஙனம் ஒருவன் புறப்பட்டுவிட்டால், எழுச்சிகொண்டு விட்டால், தெய்வம் தானே ஓடிவந்து, உடையை வேலை செய்வதற்கு ஏற்றபடி, தாறுபாய்ச்சி மடித்துக் கட்டிக்கொண்டு, அவனுக்கு முன்பாகவே அவ்வேலையைச் செய்ய முன்னிற்குமாம்.

இதனை 'ஊழ்' என்பதுமுண்டு. நாற்று வளரும் நேரத்தில் மழைபெய்வது போன்றது அது. பொலிதூற்ற நினைக்கும்போது காற்றடித்தால் எவ்வளவு நல்லது? இயற்கையின் உதவியுமிருந்தால், மனித முயற்சி எளிதாக முடிகிறதன்றோ? அதுபோல, உலக 'வினைச் சுழற்சிகள்' என்பன, பருவ நிலைகள் போலச் சாதகமாகவோ, பாதகமாகவோ மாறுகின்ற காலங்கள் உண்டு. அவையும் உதவியாக மாறினால் நல்லதல்லவா?

தன் 'குடியை உயர்த்துதல்' என்பது, இன்று தன் மொழியை, நாட்டினை, இனத்தை எனவும் விரிவுபடும். இந் நன்முயற்சியாளன் நீண்டநாள் வாழ்வான்; இளமை

பெறுவான். அவனுக்குத் தெய்வம் துணைநிற்பது மட்டுமன்று; அவன் ஏவிய வேலையைச் செய்யும்!

மனித முயற்சிக்கு 'உந்துசக்திகளை'த் தரும் வள்ளுவரின் இரக்கவுணர்வு, ஆர்வம், பற்று, பாசம் எல்லாம் வெளிப்படுமிடங்கள் இவையல்லவா?

மாந்தரின் தன்முயற்சிக்கு முதலிடம் தரும் வள்ளுவர் இன்னும் ஒருபடி மேலே செல்கிறார்.

முயற்சி, உழைப்பு என்பன மனிதச் செயல்கள். எச்செயலுக்கும் விளைவுண்டு, பயனுண்டு என்பது இயற்கை விதி, சட்டம், முறை. 'ஊழ்' என்பதும் இவ் வினைப் பயன் நுகர்ச்சியைச் சட்டமாக்கித் தரும் இயற்கைவிதியே. ஒருவன் செய்த வினைக்குப் பயனுண்டு என்பது விதியானால், அவ்விதியை வகுத்த இயற்கை அல்லது தெய்வமும் அதை மீற முடியாது - மீறக்கூடாது - மீறாது என்பதுதானே உண்மை !

**'ஆள்வினை உடைமை'** - காரியமாற்றும் திறமை. காரியத்திலேயே கண்ணும் கருத்துமாக இருந்து, அதனைப் பல்வேறு திறமைகளால் செய்து முடிக்கும் ஆற்றல். எனவே அத்தகைய முயற்சியில், தெய்வத்தின் துணை கிட்டாமற் போனாலும், அவன் உழைத்த உழைப்புக்குரிய பயன் கிடைத்தே தீரும். காற்றில்லாத போதும் அவன் பொலி தூற்றிக்கொள்ள முயன்று அதை முடித்துவிடுவான். என்ன ஓர் உண்மை? தெய்வத்தின் துணையிருந்தால் எளிதில் முடியலாம்; நினைத்ததை விடக் கூடுதல் பயன் கிடைக்கலாம். இரட்டிப்பு நன்மையுமாகலாம். அத்துணை இல்லையென்றாலும், முயற்சியுடைமையால் ஒருவன்

உடம்பு வருந்தப் பாடுபட்ட உழைப்புக்குரிய - 'கூலி', அதற்குரித்தான அளவுள்ள பயன் கிடைத்தே தீரும். அதை யாரும் ஏன் - தெய்வமும் மறுக்கமுடியாது. 'கூலி' என்பது உழைப்புக்குத் தரப்படும் ஊதியம்.

**தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சி,தன்**
**மெய்வருத்தக் கூலி தரும்.** (619)

ஓட்டப் பந்தயத்தில், பார்வையாளர்கள் 'ஓடு! நன்று நன்று! இன்னும் இன்னும் மேலே மேலே' என்று உற்சாகப் படுத்துவதைப் பார்க்கின்றோம். இவர்கள் தூண்டுதலால் விரைவாக ஓடினார்களா? அல்லது விரைவைப் பார்த்து, இவர்கள் உணர்ச்சிக்குரல் எழுப்பினார்களா?

இவ்வாறு சிந்தித்தால், ஊக்க உந்துதலின் பயன் புலப்படும். திருவள்ளுவர் வாழ்க்கை ஓட்டத்தில் ஈடுபட்டிருக்கும் 'போட்டியாளர்'களைப் பார்த்து, இவ்வாறுதான் உணர்ச்சி உந்துதல் தருமாறு குறள்களை யாத்துள்ளார்.

திருக்குறள் மூலத்தை ஓத ஓத வாழ்வில் ஒளி பிறக்கும்; இருள் விலகி ஒளிக்கீற்றுப் பாய்ந்து வழி தெரியும்; வெற்றிகள் வயப்படும்.

நல்வாழ்வும் சீரும் சிறப்பும் எல்லாம் திருக்குறளால் மட்டுமே அமையும். அஃது ஒரு மானுட மந்திரம்! பொருள் விளங்கும் மந்திரம்! நிறைமொழி மாந்தராகிய திருவள்ளுவர் அருளிய மறைமொழியாகிய மந்திரம்!

பொருள் விளங்காமல், பிறமொழி மந்திரங்களைக் கேட்டுக்கேட்டு அழிந்த காலம் போதும். காதிருந்தும்

செவிடர்களாய் இனி வாழ வேண்டாம். பொருள் விளங்காமல், ஒன்றில் ஈடுபட வாய்ப்புண்டா? அதனால் பயனுண்டா? 'சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுக' என்ற திருவாசகம் என்ன ஆயிற்று?

## படியேற்றம்

**'கற்க'** என்பார். **'கற்பவை கசடறக் கற்க'** என விளக்குவார். முடியவில்லையா, குற்றமில்லை. **'கற்றிலனாயினும் கேட்க'** என்று பிறிதொரு வழிகாட்டுவார். கண், காது பொறிகளால் இயலாத நிலையுளதே, என் செய்வேன் எனக் கவலைப் படுபவனைப் பார்த்துஆறுதல் கூறுவார்.

**பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவுஅறிந்து**
**ஆள்வினை இன்மை பழி (615)**

கண் பார்வை இல்லை; காது கேட்காது. அதற்கு என்செய்ய? அது பழியாகாது. முயற்சியிருந்தால் உறுப்புக் குறையுற்றவர்களும் உலகை வெல்லலாம். ஒருகால் குறைபட்டு, நடக்க இயலவில்லையே என்பவன், அக் குறையையும் நிறைவாக்கும் முயற்சிமிக்கவனாதல் வேண்டுமே தவிர, அக்குறையையே கூறிக்கொண்டிருப்பதுதான் குற்றமாகுமாம்.

## உயிர் இரக்கம்

கொல்லாமை, புலால் மறுத்தல் என இரண்டு அதிகாரங்கள் வகுத்தார் திருவள்ளுவர். அவர் காலத்தில் வேள்வியின் பெயரால் உயிர்க்கொலைகள் மிகுந்திருந்தன. மேலும் தெய்வங்களுக்கு மறி அறுத்துப் பலிகொடுத்தனர். புலாலும் கள்ளும் பரத்தைமையும் மன்னாயம் ஏற்றுக்

கொண்டிருந்த குறைகளாகும். இந்நிலையில் அவர் கொல்லாமையை வலியுறுத்தியுள்ள விதம் மிக அழுத்தமானது. **'உன் உயிரே போவதாக இருந்தாலும், பிறிதொன்றன் உயிரைப் போக்காதே'** என்பார் அவர் (327).

> **நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்**
> **கொன்றாகும் ஆக்கம் கடை (328).**

கொலையால் நன்மை எப்படி விளையும்? ''தேவர் பொருட்டு வேள்விக்கட்கொன்றால் இன்பமிகும் செல்வம் பெரிதாம் என்று இல்வாழ்வார்க்குக் கூறப்பட்டதாயினும்'' - என்று பரிமேலழகர் இதற்கு உரை எழுதியுள்ளார். 'வேள்விக்கண் கொலை, கொலையன்று' என்பது அவர் காலவழக்கு. அதனை மறுக்கவே 'நல்லது, ஆக்கம் உண்டாகும், செல்வமும் இன்பமும் பெருகும்' என்றெல்லாம் சொன்னாலும் கொலை கொலையே; சான்றோர்கள் அதை ஒப்பமாட்டார்கள் என்றார்.

ஒருவரது உடம்பிலேற்படும் இரத்தக் காயத்தால், சீழ்வடியும் புண்ணை யாராவது தின்பார்களா? மக்கள் உண்ணும் இறைச்சி என்பதும் ஆடுமாடுகளின் வெட்டுக் காயப்புண்தானே? அதை உண்ணலாமா? தம் சொல்லாற்றல் மூலம், புலால் உணவைப் பார்த்து, அருவருக்க வைக்கின்றார் பொய்யாமொழிப் புலவர்.

**'உண்ணாமை வேண்டும் புலாஅல்'** - ஏன்? **'பிறிதொன்றன் புண் அது'**. ஆனால் **'உணர்வார்ப் பெறின்'** - அதை வெட்டுக் காயப்புண் என உணர்ந்தால் நிச்சயம் உண்ணமாட்டார்கள்.

பிற உயிர்களின்பால் இரக்கம் கொள்வது இருக்கட்டும். மாந்தர் தத்தம் உயிர்மீதே இரக்கம் கொள்ள வேண்டுமென்பது அவர் கருத்து. **'தன்னைத் தான் காதலிக்கப் பழக வேண்டும்'** என்று ஓரிடத்தில் கூறுகிறார். மாந்தர் யார் யாரையோ காதலிக்கின்றார்கள். எது எதையோ விருப்பத்தோடு காதலிக்கின்றனர். ஆனால் தம்மைத் தாமே காதலிப்பதில்லை.

'காதலிப்பது' என்றால் என்ன பொருள்?

உயிருக்கு உயிராக நேசிக்கும் பொருளை நாம் எவ்வாறு காப்போம்? தன்னை நேசிப்பவன் - காதலிப்பவன் தனக்குத் தீங்குதரும் செயல்களில் ஈடுபடுவானா? தன் உடலுக்கு ஊறு விளைவிக்கும் உணவை உண்பானா?

**தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத்தொன்றும்**
**துன்னற்க தீவினைப் பால் (209)**

துன்னற்க - நெருங்காதே, செய்யாதே. **தீ வினை அச்சம்** அதிகாரத்தில் வருகிற குறள் இது. தீய செயலின் பயன், சுவரில் எறிந்த பந்தைப்போல், திரும்பத் தன்னிடமே வரும். எனவே எனைத்து ஒன்றும் - தீயதான எந்த ஒன்றுடனும், சிறிதளவுகூடத் துன்னற்க - நெருங்காதே என்பதாம்.

தன்னைத்தான் காத்துக்கொள்ளவும் வேண்டும் என்பது வள்ளுவக் குறிப்பு. தன் குழந்தையிடம் அக்கறை காட்டும் தாய்போல, மிகுந்த வாஞ்சையுடன், 'தம்பி! தங்காய்! சினங்கொள்ளாதீர்! அது 'சேர்ந்தாரைக் கொல்லி' என்று கூறுகிறார். சினம் - கடுங்கோபம். அது கோபம் கொண்டவனுக்கு நரம்புத் தளர்ச்சியை ஏற்படுத்தும். மன

இறுக்கத்தை மிகுவிக்கும். மாரடைப்பிலும் கொண்டு போய்விடும். இச்சீற்றம் இவ்வாறு, தன்னைக் கொண்டவனையே கொல்லும் கொடிய குணம்.

**தன்னைத்தான் காக்கின் சினம்காக்க, காவாக்கால்**
**தன்னையே கொல்லும் சினம்** (305)

மாந்தரின் நலனில் திருவள்ளுவருக்கு இவ்வளவு அக்கறை ஏன்? பிற உயிர்களைக் கொல்லாதே; கொன்றவற்றின் இறைச்சியைத் தின்னாதே; அது வெட்டுப்பட்ட புண்-சீழ் வடியும் புண் - அதை யாராவது தின்பார்களா? எல்லா உயிர்க்கும் பிறப்பு ஒன்றுதான். உயிர்களைக் கொல்வதும் அவற்றின் உடலைத் தின்பதும் பாவம். இவ்வாறு வலியுறுத்துபவர் மனிதர்களைப் பார்த்து, 'நீ உன்னையே காதலிக்கவும் கற்றுக்கொள்! உனக்குத் தீங்கு தருவனவற்றை நீயே செய்து கொள்ளலாமா? உன்னை நீயே காத்துக்கொள்ளப் பழகு. சினம் யாரிடம் பிறக்கிறதோ, அவரையே முதலில் கொல்கிறது. ஆகவே சினங்கொள்ளாதே!' - இவ்வாறு சொல்வன அவர்தம் இரக்கவுணர்வைக் காட்டுகின்றன அல்லவா?

**தன்னைத்தான் காதலன் ஆயின்...**
**தன்னைத்தான் காக்கின்...**

இந்த நடை ஒற்றுமையைக் கவனியுங்கள். எல்லோரும் தங்களைப் பேணுவதாகவும் தம்மைத் தாமே காத்துக்கொள்வதாகவும் தான் நினைக்கிறார்கள். இதனாலேயே பலர், 'தன்னைப் பேணிகளாக', 'சுயநல்மிகளாக' இருக்கிறார்கள்! ஆனால், உண்மையில் அவ்வாறு நடப்பதில்லை. வேண்டாத சண்டையில்

ஈடுபடுவார்கள்; பொருந்தாத தின்பண்டங்களை வயிறுபுடைக்கத் தின்பார்கள். ஆசைக்கு ஆட்பட்டு ஐம்புல இன்பங்களைத் தாறுமாறாகத் துய்ப்பார்கள். அந்தச் சமயத்தில் தன் உடல்நலம் கெடுமே, வாழ்வு சீரழியுமே என்று எண்ணவே மாட்டார்கள். இதுவா 'தன்னைத்தான் காதலிப்பது அல்லது காப்பது?' அதனால்தான் ஒருவன் 'தன்னைத்தான் காதலிப்பது' என்பது உண்மையானால்... 'தன்னைத்தான் காப்பது என்பது உண்மையிலேயே கடைப்பிடிக்கப்படின்...' என்ற சொல்நடையில், குறள்கள் யாக்கப்பட்டுள்ளன.

உலகம் குலமகளிரின் துணையால் இயங்குகிறது என எண்ணுவது நம் பண்பாடு. மகளிர் மனத்திண்மையை இயல்பாகப் படைத்தவர்கள்; சலனமற்ற மனமுடை யவர்கள். குலம் தழைக்கும் குழந்தைகளைப் பெற்று வளர்க்கும் கடப்பாடு மிக்கவர்கள். அவர்களுக்குக் கற்பித்தால், உலகம் கல்வியறிவு பெறும். அவர்களின் செம்மைமிக்க ஒழுக்கமுள்ள வாழ்வு உலகைச் செம்மை வழிப்படுத்தும்.

மகளிர் நினைத்தால் ஊரையே திருத்தமுடியும்; குடிகாரக் கணவன்மார்களை நல்வழிப்படுத்த முடியும் என்று ஒரு திரைப்படத்தில் காட்டினார்கள். அதிலோர் அடிப்படை உண்மை உளது.

அதனால் நம் பண்பாடு, மகளிரை மையமிட்டு, உலகை நடத்த, திருத்த, நிமிர்த்த முற்பட்டது.

தன்னை இகழும் ஊர்நடுவே, ஒருகணவன் **'ஏறு போல் பீடு நடை'** போடமுடியுமாம். ஒரு காளையின்

பெருமித நடை எவ்வாறு கைகூடும்? அதுவும் வளம் சுருங்கி, பிறர் இகழுமாறு உள்ள வறுமை நிலையில்! **‘புகழ் புரிந்த ‘இல்’லால்’** அது முடியுமாம். புகழை விரும்பி அதற்கு ஏற்ப நடக்கும் ‘இல்’ - **மனைவி** அமைந்தால் அது முடியுமாம்! எவ்வாறு? அவள் கணவனின் ‘வளத்திற்கு ஏற்பச் செலவு செய்பவள்’; வறுமையை வெளிக்காட்டாதவள்; இல்லத்திற்கு அரசி அவள்; கணவனுக்காகத் தன்னை ஈகம் செய்து, அவனைத் தன்வழிப் படவைக்கும் மென்மைமிக்க உரம் படைத்தவள்! அதனால் எத்துணை வறுமையிலும், உலகம் எவ்வளவு இகழ்ச்சி பேசுங்காலத்திலும், அதனை மாற்றிப் புகழை நிலைநிறுத்த விழையும் ஒரு மனைவி வாய்த்தால், இந்த உலகில் எவனும் ‘ஏறுபோல் பீடுநடை’ நடக்கலாம்தானே?

**புகழ்புரிந்த இல்இலோர்க்கு இல்லை இகழ்வார்முன்**
**ஏறுபோல் பீடு நடை** (59)

இகழ்வார்முன், புகழ்புரியும் மனைவி அவள்! அதனால்தான் அவளை **‘வாழ்க்கைத் துணை’** என்றார் திருவள்ளுவர், ‘கடவுள் துணை’ என்பதுபோல!

மகளிரில் இருவகையினர் உளர். **ஒருமை மகளிர், இருமனப் பெண்டிர்** என்பார் நம் தெய்வப் புலவர். இன்று குலமகளிராம் ‘ஒருமை மகளிரையும்’ இருமனப் பெண்டிராக்கக் கதை எழுதுகிறார்கள்; திரைகளில் காட்டுகிறார்கள்!

ஒருமை மகளிரைப் பிறர் ‘சிறை காக்கும் காப்பு’ மூலம் காக்க வேண்டாம்; அவர்கள் தம்மைத் தாமே காத்துக் கொள்ளும் ‘நிறைகாப்பு’ உள்ளவர்கள். அதாவது நிறை -

உள்ளத்தை அசைவின்றி நிலைநிறுத்துவது எனும் பண்பு வாய்த்தவர்கள். அவர்கள் பிறர்சொல்லித் தம்மைத் தாம் நல்வழிப்படுத்திக் கொள்பவர்கள் அல்லர். தாமே தமக்குத் தலைமை பூண்டு, தம்மைத் தாமே அடக்கியாண்டு வாழ்பவர்கள்!

பிறரால் அடக்கப்பட்டு, கட்டுப்படுவதைவிடத் தம்மைத் தாமே கட்டுப்படுத்திக்கொண்டு வாழ்வது சிறப்பு அல்லவா? பெருமைபெற நினைக்கின்ற எந்த ஆடவனும் இம் மகளிரைப் போலத் **'தன்னைத் தான் கொண்டொழுக வேண்டும்'** என்று கூறுகின்றார் செந்நாப் போதார்.

**ஒருமை மகளிரே போலப் பெருமையும்**
**தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு (974)**

'அசைவுபடாத, ஒரே உறுதிப்பாடுடைய மனத்தைப் பெற்ற குடும்ப மகளிர் தம்மைத்தாம் காத்துக் கொள்வது போல, பெருமை என்பதும் தம்மைத் தாமே காத்துக்கொண்டு ஒழுகப் பெறுபவர்களுக்கே உண்டு. தற்கட்டுப்பாடே பெருமைதரும்; இது குடும்ப மகளிரிடம் இயல்பாக உண்டு. பிறர் கட்டுப்படுத்தித் தான் கட்டுப்பாடாக வாழ்வதை விடத் தானே தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டு வாழ்வது பெருமையல்லாவா? (திருக்குறள் நுண்பொருளுரை)

மனித இனம் தீங்கை எளிதிற் பற்றிக் கொள்ளும் மனம் படைத்தது. வீட்டில் குப்பை சேர்வதுபோல, உடம்பில் அழுக்குப் படிவதுபோல, மனத்தில் மாசு படிந்துகொண்டே இருக்கும். மன மாசை உடனுக்குடன்

கூட்டித் துப்புரவு செய்துகொண்டே இருக்கவேண்டும். மன அழுக்கை வாய்மை முதலாய அறங்களால் கழுவித் தூய்மை செய்துகொண்டே இருக்கவேண்டும். இதற்குத்தான் 'தன்னைத் தான் கொண்டு ஒழுகும்' தற்கட்டுப்பாடு மிகவும் தேவைப்படுகிறது. வீட்டைக் கூட்டி, மெழுகித் துப்புரவு செய்; குளித்துத் தூய்மையாய் இரு என்று ஊரார் அறிவுரை மட்டுமே சொல்லலாம். ஆனால் தன்வீட்டையும் உடலையும் சுத்தமாய் வைத்துக்கொள்வது, அவனவன் தனக்குத்தானே செய்துகொள்ள வேண்டியன அல்லவா? இதை உணர்ந்தே திருவள்ளுவர் **'பெருமை'** அதிகாரத்தில், அப் **பெருமைதானும் 'தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு'** என்றார்.

பகைவர்களை வெல்ல, அவர் காட்டும் வழியிலும் மனிதநேயம் பளிச்சிடுகிறது.

பகையை எவ்வாறு வெல்வது? பகைக்குப் பகை என்பது பகையையே வளர்க்கும். பகையும் கூடாது; அதை வெல்லவும் வேண்டும். இதற்கு மட்டுமே பத்துக்கு மேற்பட்ட வழிவகை காட்டுவார் திருவள்ளுவர்.

**யாரொடும் பகைகொள்ளலன் என்றபின்**
**போர்ஒடுங்கும்; புகழ்ஒடுங்காது...** (1419)

என்பது வசிட்டர் இராமனுக்கு முடிசூட முயலுமுன் கூறிய **'அரசியல் அறிவுரை'!** புகழ் ஒடுங்காது என்பதால், பகை கொள்ளாமை கோழைத்தனத்தால் அன்று என்பதும் தன் பெருமித வளர்ச்சியால் பகை தானே செருக்கழிய வைப்பது அதுவென்பதும் பெறப்படும்.

**வகைஅறிந்து தற்செய்து, தற்காப்ப மாயும்**
**பகைவர்கண் பட்ட செருக்கு (878)**

'பகையை வெல்லும் வழிவகைகளை நன்கு ஆராய்ந்தறிந்து, அதனை வெல்லுவதற்கேற்றவாறு தன்னைப் பலவிதத்திலும் வளர்த்துக்கொண்டு, சோர்வு படாமல் தன்னைக் காத்துக்கொண்டால், தன் பகைவர்களிடம் ஏற்பட்ட இறுமாப்புத் தானாகவே கெட்டு முற்றிலும் ஒழியும். தற்காப்பு வளரவளரப் பகைவர்தம் இறுமாப்புத் தானாகவே தேய்ந்தொழியுமாம். (திருக்குறள் நுண்பொருளுரை)

தற்செய்தல் - தன்னைச் செய்தல் என்பது 'குடிசெய்வல்' என்பது போல ஒரு தொடர். தன்னை மேன்மேலும் தகுதியும் வலிமையும் மிக்கவனாக வளர்த்துக்கொள்ளுதல் அது. தற்காப்பு - தன்னைத் தான் காத்துக்கொள்ள அரணை உருவாக்கிப் படைகளைப் பெருக்கிக் காத்துக் கோடற்குரிய அனைத்தையும் பெருக்கிக் கொள்ளுதல். இவற்றைப் பார்த்த அளவில், பகைவர் மாயும்முன் அவர்களது ஆணவம் - இறுமாப்பு மாயுமாம்!

**இகலும் பகையும்**

உலகினர்தம் பகைமைக்கெல்லாம் உள் மனத்தில் வேர்விடும் **'இகலே'** (மனவேற்றுமையே) அடிப்படையாகும். இம்மானுட உளவியலைக் கண்டறிந்து, அதனைக் களைந்தெறிய வழிகாட்டுவது, வள்ளுவத்தின் தனிச் சிறப்பாகும்.

குடும்பத்தில் மனவேற்றுமை தோன்றும்போது, யாரேனும் ஒருவர் விட்டுக்கொடுத்துப் போவதே, ஒற்றுமைக்கு வழிவகுக்கும்.

நண்பர்களிடையே கருத்துவேறுபாடு தோன்றாதிராது. அது கருத்து முரண்பாடாக வளர்ந்துவிடாமல், ஒருவர் சிறிது ஒத்துப்போனால், எல்லாம் சரியாகிவிடும். சிறுசிறுமன மாறுபாடுதான், பெரும்பெரும் குடும்பப் பூசல்கட்கும் உலகப் பெரும் போர்களுக்கும் காரணமாகும். அது முளைவிடும்போதே, களைதல் வேண்டும். சிறிது தாழ்ந்து - விட்டுக்கொடுத்துப் போதலால், தொழில் கெட்டுப் போகாமல் காப்பாற்றலாம்.

**இகலை** (மனவேறுபாட்டை), **எவ்வ நோய்** (துன்பம் தரும் நோய்) என்றும், **துன்பத்துள் துன்பம்** என்றும் குறிப்பிடுவதிலிருந்து அதன் தீமையை உணரலாம்.

**இகல்** பெரிதா, **மிகல்** பெரிதா என விவாதிக்கிறார், திருவள்ளுவர். **மிகல்** - இகலை வளர்த்தல். இகலின் மிகல் இனிது என்பது தவறு. இகலுக்கு **'எதிர் சாய்ந்து ஒழுகல்'** (விட்டுக்கொடுத்து ஒத்துப்போக முயல்வது) நல்லது.

**இகல்எதிர் சாய்ந்து ஒழுகவல்லாரை யாரே**
**மிகலூக்கும் தன்மை யவர்** (855)

'மனமாறுபாடு தோன்றியவழி அதற்கு எதிரே விட்டுக் கொடுத்து, உடன்பட்டு வாழக் கூடியவரை, அதற்குத் தாமும் இசையாது, அவ்விகலையே மிகப் பெரிதுபடுத்தும் தன்மையுடையார் யார்? ஒருவர் இணங்கி வரும்பொழுது, மற்றவர் எளிதில் இசைந்து வாழ்வர்.

தாம் வலிமையுடைய உயர்நிலையிலிருந்தாலும், மேன்மேலும் வேறுபாட்டை வளர்த்து வெல்லக் கூடியவராகவே இருந்தாலும் வளைந்து கொடுத்து, ஒத்துப்போக முயல்வதே சிறந்த மனவலிமையாகும். 'இகலை' விட்டுக்கொடுப்பவரை எதிர்த்து, அவரை அவ்வேறுபாட்டில் மிகும்படி செய்ய, யாரும் துணிய மாட்டார்கள். வலிமையுடையவரே வளைந்து வரும்போது, யார்தான் மேன்மேலும் பகைமை பாராட்டுவார்கள். மேலும் **'இகலிற்கு எதிர்சாய்தல் ஆக்கம்'** என்றே கூறுவார் அவர்.

பகையும் போரும் அற்ற - ஆனால் வலிமை மிக்க ஓர் உலகத்தைப் படைக்க விரும்புகிறது நம் தமிழ்மறை. கோழைத்தனத்தால் அச்சமுற்று ஓடுவது - சாய்வது வேறு. இங்கு தன் வலிமை குன்றாமல் - தனது மானவுணர்வுக்கு இழுக்கு நேராமல் பிறருடன் ஒத்துப்போய் வாழும் 'வலிமையே' பேசப்படுகிறது.

**'இகல்'** (பகைத்தல்) நல்லதா? **'நகல்'** (சிரித்துப் பேசுதல்) நல்லதா? என்ற கேள்வியை எழுப்பிக்கொண்டு, எந்த நேரமும் கருத்து முரண்பட்டுச் சண்டைபிடிக்கும் பழக்கத்தை விட, சிரித்துப்பேசி இணங்கி இன்புற்று வாழ்வதைப் பழகிக் கொள்ளுங்கள் என்கிறது வள்ளுவம் (860).

நஞ்சை அமுதாக மாற்றமுடியுமா? பகையை நட்பாக ஆக்கிக் கொள்ள இயலுமா? இன்றைய அரசியலில் இந் 'நாடகங்கள்' கூடுதலாகவே நடைபெறுகின்றன.

வள்ளுவம் பகையே கூடாதென்றுதான் கூறுகிறது. ஆனால் உலகம் அதற்கு எதிர்மாறாக நடக்கிறதே.

திருவள்ளுவரின் **'பகைத்திறம் தெரிதல்'** என்பது அரசியலில், சூழ்ச்சித்திறன் வேண்டுமென வற்புறுத்துகிறது. அதே சமயம், தேவைப்படுமேல் பகையை விட்டுவிடவும் ஆயத்தமாகுக என்று கூறுகிறது. **'வில்லேர் உழவர் பகைகொள்ளினும், சொல்லேருழவர்** (கற்றுவல்ல அறிஞர்) **பகை கொள்ளற்க'** என எச்சரிக்கின்றது. முடிந்தால், சமயம் நேர்ந்தால், அதற்கு இடமிருந்தால், ஒருவேளை தேவைப்பட்டால், **'பகையையும் நட்பாக்கிக்கொள்'** என்று கூறுகிறது வள்ளுவம். அத்தகைய திறமையாளனைப் **'பண்புடையாளன்'** எனப் புகழ்ந்து, அவனது பெருந்தகைமை கண்டு உலகமே அவனது குடைக்கீழ் - ஆட்சியில் தங்கியிருக்குமாம்.

**பகைநட்பாக் கொண்டுஒழுகும் பண்புடை யாளன்**
**தகைமைக்கண் தங்கிற்று உலகு** (874)

மனித குலத்திற்கு ஊறுநேராத படியும் மான உணர்ச்சிக்குப் பங்கம் விளையாதவாறும் அறவழி காட்டிப் போவது, மிகவும் கடினமாகும்.

திருவள்ளுவர் ஒருவர் தம் நிலையில் தாழாமலும் பகைமை பாராட்டாமலும் வலிமை குன்றாமலும் பகையையும் தீங்குகளையும் வெல்லவும் வென்று முன்னேறவும் காட்டும் வழிகள் ஒப்பற்றவை. உலக நூல்களில் அரிதாகக் காண்பன பலவும் இங்கு ஒருவழித் தொகுத்து, முறைப்படி தரப்பெற்றுள்ளன. அதனால் இது மானுடம் அனைத்திற்கும் பொதுவான, காலம் அனைத்திற்கும் ஏற்றதான ஒருதிருமறையாக

விளங்குகிறது. தமிழர்கள் திருக்குறளின் உள்ளுறை பொருளைத் தெள்ளத் தெளிவாக விளங்கிக் கொள்ளவில்லை. திருக்குறள் நம் வாழ்வு நூலாகவில்லை.

இக் குறைகளைச் சொல்லிக்கொண்டேயிருந்தால் போதுமா? என்றுதான் குறள்வழி வாழ்வைத் தொடங்குவது? திருக்குறள் தமிழரின் நாகரிகப் பிழிவு, பண்பாட்டுக் கையேடு, அடையாளம், முகவரி, பொதுத் திருமறை என்று சொல்லிக் கொண்டேயிருந்தால் போதுமா?

சொல்லும் செயலும் ஒன்றாவது எப்போது? இன்றைய தமிழர்தம் வாழ்வியல்கள் கலப்படமானவை? இந்த இரண்டாயிரம் ஆண்டுகளில் நம் வாழ்வுநெறிகள் பல திசை திருப்பப்பட்டுள்ளன. வைதிகநெறி தமிழர் நெறி அன்று. தமிழர்களிடமேயிருந்த மூட நம்பிக்கைகளும் பல. இவை அனைத்தையும் களைந்து, 'வள்ளுவ வழி வழிபாடு; வள்ளுவ வழிக் குடும்ப வாழ்வு; வள்ளுவ வழித் துறவு; வள்ளுவ வழித் தவம்; வள்ளுவ வழி அரசியல்; வள்ளுவ வழிக் குடியியல்; வள்ளுவ வழிப் பொருளியல்; வள்ளுவவழிக் காதல் - பாலியல்; வள்ளுவ வழி ஆட்சியியல்; வள்ளுவ வழிப் பொது நெறியியல் - என இவை மலர்வது, நம் வாழ்வில் அன்றாடம் காணப்படுவது எப்போது? அன்றுதானே அது தமிழ்மறையாக முடியும்? நம் நாகரிகப் பண்பாட்டு அடையாளத் திருநூலாக முடியும்?

வெறும் வாய்ப்பேச்சால் என்ன பயன்? திருக்குறளுக்கு உரையெழுதுவதால் என்ன பயன்? சிறுசிறு நூல்கள்; பெரும்பெரும் ஆராய்ச்சிகளால் என்ன பயன்? எத்தனை நாட்களுக்கு 'விளங்கிக் கொள்ளும்'

முயற்சியிலேயே பொழுதைப் போக்குவது? அதில்தான் எத்தனை கருத்து வேறுபாடுகள், முரண்பாடுகள், தேவையற்ற விதண்டா வாதங்கள். திருக்குறளை முழுவதும் சிதைப்பதும் அதிகாரங்களை மாற்றுவதும், சீர்குலைப்பதும் திருக்குறள் தொண்டாகப் போற்றப் படுகிறதே? ஏழை எளிய தமிழ் மக்கள் அனைவரும் முழுமையான கல்வியறிவு பெறும் காலம் வந்தால், ஒருவேளை இந்த 'நாடகக் காட்சிகள்' மாறலாம்.

திருக்குறள் மூலமே முக்கியம். அதனையே திரும்பத் திரும்ப ஓதுதல் வேண்டும்.

இச்சிறு நூல்கள் 'திருக்குறட் கல்வியும்' 'திருக்குறள் வழி வாழ்வும்' நோக்கியன என்பதை மறவாமல் படிக்க வேண்டும்.

<u>பகையிடத்திலும் பண்புடன் நடத்தல்</u>

உற்றார் உறவினர் நண்பர்களிடத்தில் மட்டுமல்லாமல், பகையாவாரிடத்திலும் பண்புடன் நடக்கத் தூண்டுகிறது வள்ளுவம். இதுவே மானுட நேயத்தின் உச்சம்.

**நகையுள்ளும் இன்னாது இகழ்ச்சி, பகையுள்ளும்**
**பண்புள பாடறிவார் மாட்டு (995)**

நண்பர்களுடன் விளையாட்டாகச் சிரித்துப் பேசுதற்கண்ணும் ஒருவரை இகழ்ச்சிப்படக் கூறிவிடுதல் தீங்காகும். அவரவர் பண்பறிந்து பழகுகின்றவர்களுக்குப் பகைவருடன் பழகுமிடத்தும் பண்பாக நடந்துகொள்ளும் நெறிகளே உளவாகும். நண்பர் ஒருவருக்குத் திக்குவாயாக இருக்கலாம்; கால் சிறிது ஊனமாக இருக்கலாம்.

விளையாட்டாகக் கூட அதை இகழ்ச்சி தொனிக்கச் சுட்டிக் கூறிவிடக் கூடாது. அது வடுப்போல மனத்துள் பதிந்துவிடும். (நுண்பொருளுரை)

**'பகையுள்ளும் பண்புள'** என்ற தொடர் மிக அருமையானது. பாடு அறிதல் - அவரவர் தன்மையை அறிதல். **'பண்பு எனப்படுவது பாடு அறிந்து ஒழுகல்'** என்பது கலித்தொகை. மனைவியின் சிற்சில இயல்புகள் வேறுபட இருக்கலாம்; கணவனின் அன்றாட நடைமுறைத் தன்மைகள் மனைவியின் இயல்புகளுக்கு மாறுபட்டிருக்கலாம். கணவன் புலால் உண்பான்; மனைவி பிறவிச் 'சைவம்'. மனைவிக்குத் திரைப்படம் பார்க்காமல் இருக்க இயாலது. கணவனுக்கோ தொழிலுக்கே நேரம் காண்பதில்லை. இவ்வாறு எத்தனையோ தனித்தனித் தன்மைகள், இயல்புகள். எனவே அவரவர் தன்மையியல்பை அறிந்து, அதற்கேற்ப ஓரளவு நடந்துகொண்டு, இசைந்து போவதே பண்பு ஆகும். பகைமையுள்ளவிடத்தும் நாகரிகமானவர்கள் ஒருவருக்கொருவர் பண்பாகவே நடந்துகொள்வர்; நடந்துகொள்ள வேண்டும். உற்றவரிடம் பண்பாக நடந்துகொண்டேன் என்பதைவிடப் பகைவரிடத்திலும் பண்பாக நடந்து கொள்வதன்றோ பண்பின் உச்சம்; உண்மையான பண்பாளனின் வெளிப்பாடு.

தமிழ்ப் புறத்திணை பெரிதும் போர் பற்றியது.

கடும்போர்ச் சூழலிலும் பகைவன் வாளைத் தவறவிட்டால், அச்சமயம் பார்த்து, அவனைக் கொல்லுதல் கூடாது. சிறந்த ஆண்மகனாக - வீரமறவனாக இருந்தால்,

அவனுடைய வாளை, அவன் எடுத்துக்கொள்ள இடம் கொடுத்துப் பிறகு போரிட வேண்டும். இது 'தழிஞ்சி' எனப் புறத்துறைகளில் ஒன்றாகும்.

**பேராண்மை என்ப தறுகண்; ஒன்று உற்றக்கால்**
**ஊராண்மை மற்றதன் எஃகு** (773)

போர்க்காலத்தில் பகைவரைக் கொன்றழிக்கும் வன்கண்மையை, ஒரு வீரனுக்குப் பெரிய ஆண்மை என்று உலகினர் சொல்வர். ஆனால் அப் பகைவனுக்கு ஓர் இடையூறு, போர் செய்யும் நேரத்தில் ஏற்பட்டால், அதைத் தவிர்க்க உதவுதல் அப்பெரிய ஆண்மையினது உச்சத்தைக் காட்டும், வயிரம் பாய்ந்த மனவுறுதி என்று சொல்லுவர். போரிடையே எதிரி வாளைத் தவறவிட்டால், அந்த நேரம் பார்த்துக் கொல்லாமல், அவன் வாளையெடுத்துப் போர்செய்ய இடங்கொடுத்து உதவும் மனமே **'ஊராண்மையாம்'**. (நுண்பொருளுரை) முற்சுட்டிய குறளுடன் இதை ஒப்பிட்டுப் பார்த்தால், பகைவரிடத்திலும் பண்புடன் நடப்பது எப்படி என்பது விளங்கிவிடும்.

**முயற்சியாளர் மீது**
**வள்ளுவர் காட்டும் இரக்கவுணர்வு**

**'குடும்பச் சுமை'** யார்மீது விழுகிறது'? ஒரு குடும்பத்தில் பலர் 'இருந்து தின்றுகொண்டிருக்க', ஒருவர் இருவர் மட்டுமே ஓடிஓடி உழைப்பர். தனி ஒருவர் உழைப்பால், ஒரு பெரிய குடும்பமே வாழ்வதை உலகியலில் காணலாம். சும்மா சாப்பிட்டுத் தொலைக்காமல், வேறு வேலையின்மையால் ஏதாவது குற்றங்குறை எனச் சொல்லி, வெட்டிப் பேச்சுப் பேசுவர்.

அதையும் தாங்கிக்கொண்டு குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும்.

போர்க்களத்தில்கூட இதுபோன்ற நிலைதானே என எடுத்துக்காட்டுகிறார் வள்ளுவப் பெருந்தகை. ஒரு மாமறவன் கடுமையாய்ப் போரிட்டுப் பகையை ஓட்டுவான். மற்றவர்களுக்கும் அது வெற்றி வாய்ப்பாகும்.

**அமர் அகத்து வண்கண்ணர்போலத் தமர்அகத்தும்**
**ஆற்றுவார் மேற்றே பொறை (1027)**

**'குடிசெயல் வகை'** என்ற அதிகாரத்தில் இது வருகிறது. ஒவ்வொரு குடியும் சிறப்புற, ஊர் சிறப்புறும்; ஊர்கள் சிறக்க நாடு சிறக்கும் எனக் கருதியுள்ளார் நம் பேராசான். அமர் அகம் - போர்க்களம். தமர் அகம் - தம் உறவினர் அதாவது தம்மவர் சூழ்ந்திருக்கும் தம் வீடு, குடி. போர்க்களத்தில் வன்கண்மை (பெருவீரம்) உள்ளவர்களே, போரைத் தாங்குவர்; எதிரிகளை முறியடிப்பர். அதுபோல, ஒரு குடும்பத்திலும், அக்குடும்பப் பொறுப்பென்னும் சுமையைத் தாங்கவல்லவர் யாரோ, அவர் மீதே சுமை (பொறை - சுமை) யனைத்தும் விழும்.

**குடிசெயல் வகை** - பொருள் என்ன? குடியை, குடும்பத்தை உயர்த்த, வலிமையுடையதாக்க, புகழுடைய குடியாக ஆக்க, துன்பம் வந்தவிடத்துத் தாங்க, குடும்பப் பொறுப்புக்களை முன்னின்று ஏற்க முயல்கின்ற செயல்கள் அல்லது கடமைகள். இவற்றை ஏற்பவன் கடும் உழைப்பாளியாக இருப்பான். நாளும் கடமையே கண்ணுங்கருத்துமாகப் பாடுபடுதலின், அவன் வேளைக்கு உண்ணமாட்டான். நன்கு உறங்கிப் பலநாள் ஆகக் கூடும்.

ஐயோ! அவன் உடம்பு வாடும்; தேயும்! அத்தனை துன்பங்களையும் தாங்குதலால், **'அந்த உடம்பு இடும்பைக்கே கொள்கலமாகுமோ!'** என நம் திருமறைப் பேரருளாளர் கரைந்துருகுதல், குறளில் காட்சிப் படுகிறது.

**இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ குடும்பத்தைக்**
**குற்றம் மறைப்பான் உடம்பு?** (1029)

குடும்பத்தைக் குற்றம் மறைத்தல் - குடும்பத்திற்கு ஏற்படும் குறைகளை, தீங்குகளை அகற்றி அவை வெளிப்படாவாறு உடனுக்குடன் காப்பாற்றுதல். இடும்பைகள் - கடுந்துன்பங்கள் - அவற்றைப் பெய்துவைக்கும் கொள்கலமாக, அவனது உடம்பு ஆகுமோ?

நம் குடும்பத்துள் இப்படி ஒருவர் இருந்தால்கூட, நம் மனம் இத்துணை இரக்கப்படுமா என்பது ஐயமே! வள்ளுவரின் இரக்கவுணர்வு, குறளின் நடையில் நெகிழ்ச்சியுளதாகிறது! உருகும் உள்ளத்தை உணரமுடிகிறது.

<u>துன்பம் என்னும் தொடர்வண்டி</u>

துன்பம் என்றும் தனித்து வருவதில்லை. அது பல துணைத் துன்பங்களைக் கூட்டிக் கொண்டு வரும். **நல்குரவு** - வறுமை என்ற துன்பமோ, மிகப் பலவாய துன்பங்களைக் கொண்டுவரும். **'நல்குரவு என்னும் இடும்பையுள், பல்குரைத் துன்பங்கள்** (மிகப் பலவாய துன்பங்கள்) **சென்று படும்'** (1045). அதுபோல அடுக்கி, ஒன்றன்பின் ஒன்றாக வரும் துன்பங்களைக் கண்டு, மனம் அழியாது மேன்மேல்

முயன்று உழைப்பவனைக் கண்டால் துன்பம், துன்பப்படும்.

**அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற**
**இடுக்கண் இடுக்கட் படும். (625)**

'ஏன் இவனிடம் வந்தோம்' என்று, துன்பமே துன்புற்று ஓடுமாறு முயலுங்கள், உழையுங்கள்' என ஊக்கப்படுத்தும் முறை இது. 'அழிவிலான்' - மனம் அழியாதவன்; ஊக்கம் குன்றாதவன். படை பின்வாங்கும் போது 'அழிகிறது' என்பார்கள். **'அழிபடை'** என்றே, பின்வாங்கி ஓடும்படையைக் குறிப்பர். இங்கு போர்க்களத்திற்போல, துன்பத்துடன் போரிட்டு, அதைப் பின்வாங்கச் செய்யுமாறு, தான் பின் வாங்காது முன்னின்று முனைந்து செயற்படுபவன் என்ற கருத்திலேயே, **'அழிவிலான்'** எனப்பட்டது. இஃதொரு போர்க்களச் சொல்.

மனங்கலங்கும்படியான ஒரு பெருந்துன்பம் வருகிறதென்று வைத்துக் கொள்ளுங்கள். மிக நெருங்கிய ஒருவரை இழக்கவும் நேரலாம். மிகப் பெரிதாகப் பொருள் இழப்பு நேரலாம். அப்போதுதான் மனம் கலங்கும். அப்போது உற்றார் என்ன சொல்வார்கள்? ''ஏனப்பா கலங்குகிறாய்! போனது போகட்டும்... போனவர் திரும்பி வரப் போகிறாரா... வீணாகக் கலங்கி, அழுது, புலம்பி என்ன பயன்? உடம்புதான் கெடும். ஆறுதலாக இரு; கலங்காதே!'' என்றுதானே மனத்தை ஆற்றும்படி கூறித் தேற்றுவார்கள். நம் தமிழினப் பேராசான் திருவள்ளுவரும், உலக மானுடனாம் தன் உறவினனை நோக்கி, அதே ஆறுதலுரையைக் கூறுகிறார். கேளுங்கள்!

**'இலக்கம் உடம்பு இடும்பைக்கு' என்று**
**கலக்கத்தைக்**
**கையாறாக் கொள்ளாதாம் மேல்** (627)

'கடுந் துன்பத்தால் வரும் மனக்கலக்கம் உடம்பையே குறிவைத்துத் தாக்கும் என்பதை அறிந்த மேன் மக்கள் அத்துன்பம் வந்தபோது அதுகண்டு மனங்கலங்குவதை, அதை நீக்கும் வழியாகக் கொள்ளமாட்டார்கள்'. உடம்பு இடும்பைக்கு இலக்கம். இலக்கு என்பது குறி - குறிப்பிட்ட இடம் பார்த்துத் தாக்குவது. கையாறாகக் கொள்ளுதல் - அது நீக்கும் வழியாகக் கொள்ளுதல். துன்பப் படுபவனைப் பார்த்து, வள்ளுவப் பெருந்தகை, 'முதலில் கலங்கிக் கண்ணீர் வடிப்பதை விடு. அது உன் உடம்பைக் கெடுக்குமே தவிர உதவாது. வேறு ஆகவேண்டியதைப் பார்! கலங்குவதால் உடல் கெடுமே தவிரத் துன்பம் குறையாது' எனக் கூறும் அறிவுரையில், ஒரு தந்தையின் வாஞ்சை வெளிப்படுகிறதல்லவா?

## துன்பம் செய்பவனை வெல்வது எவ்வாறு?

பகை பகையைத்தான் வளர்க்கும். பகையை மாற்ற முயல்வதே பகையை ஒழிக்கும் வழி.

மனவேறுபாடு எனும் இகல், அதனையே கைக்கொண்டால், அதே 'இகல்'தான் வளரும். இகலுக்கு எதிரே 'மிகலை' விட (இகலைக் கூட்டுதல்), இகலுக்கு 'எதிர்சாய்தல்' (விட்டுக்கொடுத்தல்) நட்பை, காதலை முறிக்காமல் காக்கும்.

இன்னா செய்தார்க்கு நாம் திரும்பவும் இன்னா செய்யலாம். தீங்கு செய்தவனுக்குத் தீங்கு செய்தல் எனப் பழிக்குப் பழி தொடரத் தொடர, இருபாலும் தீங்கே வளரும். தீங்கை ஒழிக்கவழி, திரும்பத் தீங்கு செய்தலன்று. தீங்கு செய்தவனினும் மேம்பட்டு, ஒரு நன்மை செய்துகாட்டி, அத்தீங்கு செய்தவனையே வெட்கப்பட வைக்க வேண்டும். அதுவே உண்மையாக அவனை வெல்லும் வழியாகும்!

இவை வள்ளுவ மருந்துகள். சமுதாயப் பிணி தீர்க்கும் மருந்துகள். வள்ளுவ நெறிகள். உலகமே வியக்குமாறு, சமுதாய உளவியலும் மானுட உளவியலும் அறிந்து, பிணி தீர்க்கவென்று, மன்பதையின் மருத்துவப் பேரறிஞன் தந்த குளிகைகள் - மாத்திரைகள் - அறநெறி மருந்துகள்!

அம்மட்டோ?

**கறுத்து இன்னா செய்தவக் கண்ணும்,**
**மறுத்துஇன்னா**
**செய்யாமை மாசுஅற்றார் கோள் (312)**

தம்மீது கடுஞ்சீற்றம் கொண்டு துன்பம் தருவனவற்றை ஒருவர் செய்தபோதும், தாம் திரும்பவும் அவருக்குத் துன்பச் செயல்களைச் செய்யாதிருக்க வேண்டுமென்பது மனமாசற்ற தூயாரது கொள்கையாகும். கறுத்து - கடுங்கோபம் கொண்டு. மறுத்து - திரும்பவும். அதாவது துன்பத்திற்குத் துன்பம், தீமைக்குத் தீமை, பழிக்குப் பழி எனச் செய்தல். மன மாசு சிறிதும் இல்லாதவர்தம் பெருமிதமான செயல் இது.

நீ ஒருவனுக்குத் தீங்கு செய்யாதிருக்கவும். அவன் உனக்குப் பெருந்தீமை செய்தானாயினும் நீ திரும்பவும் அவனுக்குத் தீங்கு செய்யாதே! அப்படித் தீங்கு செய்தவனும் வெட்கப்படும்படி, அவனுக்கு ஒரு நன்மையைச் செய்து காட்டுவதே, அவனைத் தண்டிக்கும் வழி. இன்னாதவற்றைச் செய்தவர்க்கும், இனியவற்றைச் செய்வதே சால்புடைமைக்கு அழகு. இவ்வாறான குறள்களே, உருசிய நாட்டறிஞர் **தால்சுடாயைக்** கவர்ந்தன; **காந்தியடிகளைப்** படித்துப் பின்பற்றச் செய்தன; இன்றைய **'அகிம்சை'** என்ற கோட்பாட்டிற்கு அடித்தளமிட்டன. திருக்குறளாய்வுப் பேரறிஞர் க.த. **திருநாவுக்கரசு** தமது **'சான்றோர் கண்ட திருவள்ளுவர்'** நூலில் இவற்றை விளக்கியுள்ளார்.

திருக்குறளைப் பற்றி நான்குவரி எழுதி, தாம் ஏதோ புதுவதாகக் கூறியுள்ள 'புது'க் கண்டுபிடிப்பு என விளம்பரப் படுத்தித் தங்கப்பதக்கம், விருது, பரிசு, பொற்கிழி எனப் பலரும் பெறுகின்றனர். திருக்குறட் கட்டமைப்பையே சீர் குலைப்பவர்கள் தம் செல்வாக்கைப் பயன்படுத்திப் பாராட்டுப் பத்திரம் பெறுகின்றனர்.

திருக்குறளாய்வில் தலைநின்ற **வ.சுப.மாணிக்கனார், க.த. திருநாவுக்கரசு** போல்வார் பெறவேண்டிய பெருமைகளைப் பிறர்பலர் பெறுகின்றனர். திருவள்ளுவரே இன்று இருந்தாலும், அவருக்குத் 'திருவள்ளுவர் விருது' கிடைக்குமா என்பது ஐயமே.

## இவை மனித நேயம் ஆகுமா?

திருவள்ளுவர் இடித்துக் கூறும் இடங்கள் சில பாருங்கள்:

இவர்கள் உயிரோடிருப்பது உலகிற்குச் சுமையாகும்; போய்த் தொலையலாமே!

இவர்கள் உயிரோடிருந்தாலும் செத்தாலும் உலகிற்கு ஒரு பயனுமில்லை!

மானம் இழந்து, பின் உயிர் வாழவும் வேண்டுமா?

நாணத்தைக் காப்பாற்ற உயிரையும் துறக்கலாமே தவிர, உயிரைக் காப்பதற்காக நாணத்தைக் கைவிடலாமா?

ஈதல் இயையாத பொழுது சாதலும் இனிதன்றோ?

தன்முயற்சியின்மையால், உண்ண உணவும் இல்லாமல் போகின்றவர், பிறரது உப்புக்கும் காடிக் கஞ்சித் தண்ணீருக்கும் எமனாக வாழ வேண்டுமா?

இங்ஙனம் மாந்தரின் மானவுணர்வைத் தூண்டிச் செயற்படுமிடங்கள் பலவுள. இவை உயிர்கள் மீது இரக்கமின்றிக் கூறியவை அல்ல. தன் முயற்சியுடனும் மானத்துடனும் பெருமையுடனும் உலகிற்கு உதவுமாறும் வாழும் வாழ்வே சிறந்தது!

இல்லையென்றால், 'நீ உயிரோடு பூமிக்குப் பாரமாய் இருந்து பயனென்ன' என்று கேட்டு, மாந்தரை விழிப்படையவைக்கும் உணர்ச்சித் தூண்டல்கள் இவை. மானவுணர்வைக் கிளறிவிட்டாலன்றி, இவர்கள் வழிக்கு வரமாட்டார்கள் என நினைக்குமிடங்களில் வள்ளுவர் கூறியவை!

திருவள்ளுவப் பேராசான் கூறும் இன்னா செய்யாமை, கோழைத்தனத்தாலோ, வலிமையின்மையாலோ

அல்ல. அவை அப் பகையாவாரினும் மேம்பட்டு, வெல்லும் வழிகள்!

தீங்கு செய்தவனை ஒறுப்பது - தண்டிப்பது அரசியலில் இன்றியமையாதது. அது 'களை எடுப்பதற்கு' ஒப்பாகும். தனி மனித வாழ்வில் ஒறுப்பதை விடப் பொறுப்பது நல்லது; இன்னும் சொன்னால் பொறுப்பது என்பதைவிட, அதை மறப்பதே மிக நல்லது என்கிறது வள்ளுவம்.

**பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை**
**மறத்தல் அதனினும் நன்று** (152)

'இறப்பு என்பது, இங்கு எல்லை கடந்து, சிலர் செய்யும் தீங்கு. எப்பொழுதும் அதனைப் பொறுத்தல் நல்லது. அதைவிடவும் அதனை மறத்தல் மிக நல்லது!

படிநிலைகளை இங்கு எண்ணிப் பாருங்கள்! ஒறுத்தல் (தண்டித்தல்) நல்லதுதான், தேவையுள்ள இடங்களில். அதனிலும் பொறுத்தல் நல்லது. தனிமனித வாழ்வுநெறிகளில் பொறுத்தலிலும் நல்லது, பிறர் செய்த தீங்கை மறத்தல்.

அடிக்க, அடிக்க அடங்கிப் போகும் அடிமை வாழ்வையா, **'பொறையுடைமை'** அதிகாரம் விளக்குகிறது? வலிமை இன்மையாலோ, கோழைத்தனத்தாலோ, அச்சத்தாலோ அடங்கிப் போவன 'பொறுமை' ஆகா!

மனித இனம் நோகாமல் வாழ வழிகாட்டும் வள்ளுவம் சொல்லும் **'பொறையுடைமை'** (பொறுமை) சான்றோர்கள் மேற்கொள்வது; வலிமை மிக்கவர்கள் கைக்கொள்வது.

சினத்தை அடக்கவல்லவர்கள், மனத்தைத் தடுத்து நிறுத்த வல்லவர்கள் - **'நிறை'**யுடையவர்கள் கொள்ளும் பண்பாடு அது.

ஒருவர் பதவிச் செருக்கால், செல்வ இறுமாப்பால், அறிவிலா ஆணவத்தால் உனக்கு ஏதேனும் வரம்பு மீறிய தீங்குகளைச் செய்தார்களாயின் நீ என்ன செய்யவேண்டும்?

நேரே எதிர்த்து நின்று, நம்மூர்க் 'குழாயடிச் சண்டை போல' மோதிச் சீர் குலைவதை விட்டுவிடு!

நீ உன் தகுதியைப் பெருக்கிக்கொள்! மேன்மேல் உயர முயன்று கொண்டே இரு! உன் தகுதி உயர உயர அவன் மனம் வெந்து, நொந்து அழிவான்! வேறு வழியில் வெல்வதைவிட இதுவே அவனை உண்மையிலேயே வெல்வதாகும்.

**மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்**
**தகுதியான் வென்று விடல் (158)**

மிகுதி - செருக்கும் தருக்கும் இறுமாப்பும். மிக்கவை - வரம்பு மீறியவை.

**பகைக்காமலே பகையை வெல்லுதல் !**

**இன்னா செய்யாதே, செய்தாரை வெல்லுதல் !**

**பொறுமையைச் சோதிப்பவரை, அப்பொறுமையைக் கைவிடாமலே வெற்றி கொள்ளுதல்!**

**தன்னை வளர்த்துக் கொள்வதன்மூலம், பிறரைவிட மேம்பட்டு, அவரை வெல்லுதல்!**

– இத்தகைய அறங்களையே தொடர்ந்து போதிக்கும் திருக்குறள் நூல் ஒன்றே, போரற்ற உலகிற்கும் பகையற்ற வாழ்விற்கும் துன்பமற்ற நிலைமைக்கும் வழிகாட்டுவதாகும். இந்த அறங்கள் மிக நுட்பமானவை. கதையாக புதினமாக நாடகமாக திரையாக – உலகிடைப் பரப்பவேண்டிய பற்பல நுண்பொருட் சிந்தனைகள் இதிற் பலவுள.

தமிழர்களாகிய நாம் இதை முழுமையாக விளங்கிக்கொண்டு, பிறகு உலகிற்கு எடுத்துச் சொல்லவேண்டும்!

## அளவறிந்து வாழ்க !

திருவள்ளுவரின் மாந்த நேயம் அளவிடற்கு அரியது. கடல்போல் பரந்தது. வானென உயர்ந்தது. ஒருவன் ஈந்து வாழவேண்டும்; அதற்காகத் தன்னை இழந்துவிடக் கூடாது. செல்வமனைத்தையும் கொடுத்துவிட்டு, கையேந்தும் வரிசையில் ஒருவனாகப் போய் நிற்கக்கூடாது!

புறனடையாகச் சிலர் இருக்கலாம். பொன் தேரை, முல்லைக் கொடிக்கு ஈந்த பாரியாக எல்லோருமே இருத்தல் இயலாது. **'யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி'**, என அளவாக ஈந்து வாழ்பவர்களே மிகப்பலர். **'குடியிருந்த வீடுங் கொடுத்த விழுத்தெய்வம்'** அழகப்பராக ஆக எல்லோராலும் இயலாது. தங்குவதற்கு நிழல்கொடுக்கும், சாலை ஓர நிழற்கொடை வழங்குபவர்கள் பலராதல் கண்கூடு.

ஒரு சிலரே வாழ்வின் எல்லை வகுத்தவர்கள்! அஃதன்றி எல்லோரும் பின்பற்றும் வாழ்வியலும் வேண்டும்!

திருவள்ளுவர் தனிமனித அறநெறிகளில் அழுத்தம் வைத்தவர்.

முயற்சியற்றுக் கிடப்பவனைப் பார்த்து 'நீயும் உயிர் வாழ வேண்டுமா?' என இடித்துரைப்பார். இரப்பவனைப் பார்த்து, 'இது தேவைதானா?' முயன்று கஞ்சித்தண்ணீரை மட்டுமே குடித்தாலும் அதிலல்லவா இன்பம் உளது. இரத்தலைப் போல நாவிற்கு இளிவந்தது இல்லையே' என்பார்.

அதேசமயம் செல்வ வளமுடையவனைப் பார்த்து, 'இரப்பவனுக்குக் கரவாது (மறையாது) கொடுத்து வாழப் பழகு' என்பார். செல்வத்தைக் கரப்பவர்களை பதுக்குபவர்களை மிகவும் கடிந்துரைப்பார்.

இவை முரண்பாடுகள் அல்ல. மாந்தரினம் முயன்று வாழவேண்டும். உறுப்புக்குறையாலோ, பிறவாறோ இரந்து வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டவனைச் சாகவிடலாமா? அங்குக் **'கரவாது உவந்து ஈய'** வேண்டும். கரவாது உவந்து ஈயும் கண்ணன்னார் கண்ணும் இரவாமையும் வேண்டும். இரண்டுமே உலகியல் என உணர்க!

இந்த முரண்பாடு வள்ளுவருடையதன்று. உலகிடைக் காணும் முரண்பாடு இது. இத்தகைய முரண்பாடுகளை, முட்டறுத்து மனித இனம் கட்டறுத்து விடுதலை பெற வழிகாட்டுவதே வள்ளுவம்.

செல்வன் ஈதல் வேண்டும். பிறர்க்கு ஈவதிலும் ஓர் இன்பம் இருக்கிறது. அது 'ஈத்துவக்கும் இன்பம்'. ஈதல் வேண்டுமேல் பொருள் வேண்டும். பொருட்செல்வம்

வேண்டுமேல் அதற்கான முயற்சியும் உழைப்பும் திறமையும் வேண்டும்.

கொடுத்துப் பழகியவன் நிறுத்தமாட்டான். கொடுத்துக் கொடுத்துப் புகழ்பெற வாழ்வான். புகழ்தான் வாழ்வின் நிகர ஊதியம் என்பது வள்ளுவர் கருத்து. செல்வம் வருகிறது; போகிறது. பதவிகள் வருகின்றன; போகின்றன. 'அடையுமிவை அத்தனையும் கழித்துப் பார்க்குங்கால்' மீதமிருப்பது எது? புகழ், நல்லபெயர்! உலகம் அவனைப் பிரியும்போது அழும். அதற்கு எதிரானவனை, 'நல்லவேளை, தொலைந்தான்' என மகிழும். ஒரு குடும்பத்தில் கூட அதே நிலைதானே!

அதனால்தான், ஈதலில் பழகிவிட்டவன், அதில் இன்பங்கண்டவன், ஈதல் இயையாதபோது, சாதலும் இனிது என்பான். அந்த அளவு அவனிடம் ஈதலில் விருப்பம் ஏற்படுமாம்.

எனவேதான், வசதி வளம் வாய்ப்புடையவர்களைப் பார்த்து, **'ஈத்து உவக்கும் இன்பத்தை'** அறிவுறுத்தி அவர்களை அதில் பழக்கப் பார்க்கிறார் வள்ளுவச்செல்வர். அவர்கள் மனத்தில் அழுத்தமாய்ப் பதியும்படி ஈகை அதிகாரக் கடைசிக் குறளில் கூறும் கருத்து இது.

**சாதலின் இன்னாதது இல்லை; இனிது அதூஉம்**
**ஈதல் இயையாக் கடை (230)**

பொருள் சேர்த்தும் பிறர்க்குக் கொடுத்தும் மகிழமாட்டாதவன், வாழ்வதைவிடச் சாவது இனிதாகும். ஈதல் அறத்தை வற்புறுத்த வந்த குறள் இது. ஈதலும் இசைபட வாழ்தலுமே வாழ்வின் நிகர ஊதியம் -

வாழ்க்கைக் கணக்குப் பேரேட்டில் எஞ்சி நிற்கும் மீதம் என்ற குறளாசான், அங்ஙனம் வாழ இயலவில்லையேல், உயிருடன் இருந்தென்ன பயன் என வினவுமிடம் இது. உணர்ச்சித் தூண்டல் நடை இது. மனிதருக்கு இத்துணை உந்துதல் தந்த பிறகும் கருமியாய் வாழவே முந்துவோர் பலராவர்.

ஆனால் இங்ஙனம் தூண்டியவர், ஒருவன் ஈயும் பழக்கமுடையவனானதும் எவ்வாறு ஈந்து வாழவேண்டுமென்ற, ஒரு வரையறையை **'வலியறிதல்'** அதிகாரத்தில் சொல்கிறார். **'வளத்தக்காள் வாழ்க்கைத் துணை'** என்பதுபோலத் தன் செல்வ வளத்தின் எல்லையறிந்து, அதற்கேற்ப அளவாக ஈந்து வாழ வேண்டும். அங்ஙனம் ஈதலால், செல்வம் நாடொறும் வளரவளர, மேன்மேலும் கொடுத்து வாழலாம். ஒரேயடியாகக் கொடுத்துத் தான் ஏழையாவதைவிட, அளவறிந்து கொடுப்பதால் நெடுநாட்களுக்குக் கொடுக்க முடியும். மேன்மேலும் கொடுப்பதாலும் கொடுப்பதின் அளவும் மிகமிகக் கூடும். என்றும் கொடுத்துக்கொண்டே இருக்க அது வழி செய்யும். **'பொருளாட்சி அதைப் போற்றாதார்க்கு இல்லை'** என்று, செல்வத்தைப் போற்றிக் காத்து வாழ வழி சொன்ன திருவள்ளுவர், ஈதலிலும் அதே நெறியை வற்புறுத்துகிறார்.

**ஆற்றின் அளவு அறிந்து ஈக! அதுபொருள்**
**போற்றி வழங்கும் நெறி** (477)

ஈதலைப் போற்றும் அறநெறியின்படி, தனக்குரிய பொருளினது அளவை அறிந்து அதற்கு ஏற்ப ஈக! அது

பொருட்செல்வத்தைப் பேணிக் காத்து, மேன்மேலும் ஈந்து வாழ்வதற்கான நெறியாகும்!

**'ஆற்றின் ஈதல்'**, அறநெறி அறிந்து தக்கார்க்கு, தேவையினளவு ஈதல். **'அளவு அறிதல்'**, தன் செல்வத்தினது அளவையும் அறிந்து, அச்சூழலில் ஈய வேண்டிய அளவையும் அறிந்து ஈதல். அது-அவ்வாறு ஈயும் நெறி. **'பொருளைப் போற்றி வழங்கும் நெறி'** - பொருட்செல்வத்தைப் பேணிக் காத்து, மேன்மேலும் சேர்த்து, நெடுங்காலம் வழங்கும் நெறியாகும்.

ஒப்புரவை வற்புறுத்துமிடத்தும் வள்ளுவப் பேராசான் இதே நெறியைக் கடைப்பிடிப்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஊருணி போலவும், உள்ளூரில் பழுத்த மரம் போலவும், உள்ளதெல்லாம் உதவும் மருந்து மரம் போலவும் ஒருவன் எல்லாவகையாலும் உலகிற்குப் பயன்பட வாழவேண்டும். சான்றாண்மையாளர்க்கு **'நல்லவை எல்லாம் கடன்'** என்பார் அவர். அதாவது உலகில் எவையெவை நல்லனவோ, அவையனைத்தையும் ஆற்றுதல் அவர்தம் கடமையாகும்.

**'ஒப்புரவு'** வள்ளுவச் சிந்தனையாளர் கண்ட **சோசலிசக் கோட்பாடு**, சமதருமக் கொள்கை. ஒரு செல்வர், தொழிலதிபர், வணிகர், உற்பத்தியாளர் அவற்றைத் தம் முயற்சியால் பெற்றாலும் அத்துறைகளை எங்கிருந்து பெற்றார்? எங்கிருந்து அடைந்தார்? அவற்றை அவருக்குத் தந்த அந்த மக்கட் சமுதாயமாம் மன்பதையினர்க்கு அவர் கடமைப்பட்டவரல்லவா?

மன்னாயத்திடமிருந்து வளர்ந்த ஒருவன் அம் மக்களுக்குக் கடமைப்பட்டுள்ளதையே 'ஒப்பு' அல்லது **ஒப்புரவு** உணர்த்துகிறது. அதனால்தான் **'கைம்மாறு வேண் டாக் கடப்பாடு (கடமை), ஒப்புரவு'** என்றார் நம் திருவள்ளுவர்.

தண்ணீர்ப் பந்தல் வைத்தல், பள்ளி கட்டுதல், மருத்துவமனை அமைத்தல் எனப் பொது நன்மை கருதிச் செய்வன எல்லாம் இதிலடங்கும். இவ்வாறு செய்வதால் பணம் செலவாகும்; கேடு நேரும் என்று யாரும் சொன்னால் அது தவறு. கேடு நேராது. அப்படியே நேரும் என்பது உண்மையானாலும், அதனை ஒருவன் தன்னை விற்றாவது கொள்ளலாம். அத்துணைத் தகுதியுடையது ஒப்புரவு.

**'ஒப்புரவினால் வரும் கேடு' எனின், அஃது ஒருவன்**
**விற்றுக்கோள் தக்கது உடைத்து'** (220)

இது ஒப்புரவை வலியுறுத்தும் இடம். அந் நோக்கமே இல்லாதவனுக்கு, இடித்துரைத்து நல்வழிக்குத் திருப்புமிடம். இத்துணை இடித்துச் சொல்லாவிட்டால், சிலர் 'மண்டையில்' அது ஏறாது. 'பணம் செலவாகும்; செல்வம் போய்விடும்; வறுமை வந்துவிடும்'. அது இது என்று சொல்லித் தப்பிக்கவே முயல்வர். அத்தகையவரைப் பார்த்துக் கேடு வராது; வருமென்றே கொண்டாலும், 'அவ்வாறு வருவதை ஏற்பதே சிறந்தது' என வலியுறுத்தும் மொழி நடை இது.

ஆயினும் அங்ஙனம் **'ஒப்புரவு'** செய்யும் மனப் பழக்கம் ஏற்பட்டு, அதிலேயே ஈடுபடும் செல்வர்களின் பக்கம் திரும்பி ''உங்களிடம் எவ்வளவு செல்வ வளம்

இருக்கிறதோ, அதை நன்கு அளந்து அறிந்து கொண்டு, அதற்கு ஏற்ப ஒப்புரவிற்குச் செலவிடுங்கள். அங்ஙனமல்லாமல், ஒப்புரவில் அனைத்தையும் விட்டுவிடும் செயலில் ஈடுபட்டால், உங்கள் செல்வவளம் விரைந்து கெட்டு விடும்'' என்றும் எச்சரிக்கின்றார்.

இதுவும் ஒருவன் தன் செல்வ வளத்தைக் காத்துக்கொண்டு, தொடர்ந்து ஒப்புரவில் ஈடுபட வழி காட்டுகிறது.

**உளவரை தூக்காத ஒப்புர வாண்மை**
**வளவரை வல்லைக் கெடும்.** (480)

**உளவரை** - தன்னிடமுள்ள செல்வத்தினது அளவு. **தூக்காத** - அளந்து அறியாத. **ஒப்புரவாண்மை** - ஒப்புரவுச் செய்கை. **வள வரை** - ஒருவரது செல்வ வளத்தினது அளவு. **வல்லைக் கெடும்** - மிக விரைந்து கெடும்.

இவை அவற்றைத் தடுப்பன அல்ல. அவ் அறங்களை நெடுங்காலம் பலருக்கும் மேன்மேலும் செய்ய வழிகாட்டுவன.

**காதல் வாழ்வு**

காதல் என்பது ஒருவர் மீது ஒருவர் கொள்ளும் அன்பு, ஈடுபாடு, விருப்பம், ஆசை. காமம் என்பது அதனால் துய்க்கும் உடலின்பம். வயிற்றுப்பசி தீர்ப்பதுபோல், உடற்பசி தீர்ப்பது உயிரினது இயற்கை. அதனை நெறிப்படுத்த முயல்வது திருக்குறள் காமத்துப்பால். அதனால் அது **'பாலியல் உளவியல்'** சார்ந்த கல்விபோல எழுதப்பட்டுள்ளது. கலவி, கல்வியாய்க் கலைநுணுக்கத்தோடு கூறப்படுகிறது.

இக் காதலில் இருவர் மனமும் இசைய வேண்டும். பெற்றோர் செய்துவைத்த மணமேயாயினும், ஒருவர் ஒருவரை விரும்பி வாழ வேண்டும். மனத்தால் இணங்கி, இசைந்து, உயிருக்கு உயிராய்க் கூடி வாழவேண்டும்.

காதல் திருமணத்தில்தான் இது முடியுமென்பது தவறு. பெரும்பான்மையானவை காம இன்ப வயப்பட்டு, அவசரத்தில் முடிவெடுப்பவை. அழகற்றவர் என்று மற்றவர் கருதுபவர்களிடம் கூட, மணந்தபின் ஆசையோடு மனம் ஒன்றி வாழ்பவர்கள் உலகிலுளர். இருவருக்கும் ஒத்த உணர்வு வேண்டும்; ஒன்றுபட்ட உணர்வை உண்டாக்கிக் கொள்ள முடியும். பெரிதும் இருவரும் ஒருமனதாக வாய்ப்புண்டு. அவ் வாய்ப்பை உண்டாக்கிக் கொள்ள, வற்புறுத்தும் திருவள்ளுவர், அவ் வாய்ப்பு அறவே இலதேல், உடன் வாழ்ந்து பயன் என்ன? என்ற கருத்தும் தொனிக்க, விளக்குகின்றார்.

வாழ்க்கைத் துணைநலம் என்று தொடங்கியபோதே, திருவள்ளுவர், ஒரு பெண் தான் அடைந்த கணவனைத் தனக்கே உரித்தாக, அவனது அன்பைப் பெறுவாளானால், அவள் தேவர் உலகில் பெறக்கூடிய பெருஞ்சிறப்பையும் பேரின்ப வாழ்வையும் இங்கேயே பெறுவாள், என்று கூறுகிறார்.

**பெற்றான் பெறின்பெறுவர் பெண்டிர்**
**பெருஞ்சிறப்புப்**
**புத்தேளிர் வாழும் உலகு.** (58)

தன்னை மனைவியாகப் பெற்ற கணவனை, அவனும் தனக்கேயுரியவனாக அன்பு விருப்பத்தால் இசைந்து

இணையப் பெறுவாளானால், பெருஞ்சிறப்புள்ள புத்தேளிர் (தேவர்கள்) வாழும் உலக இன்பத்தை இங்கேயே பெறுவாள். அல்லாமல் இங்குமட்டுமன்றி, தேவ உலகிலும் பெருஞ்சிறப்புப் பெறுவாள்.

அதாவது கணவன் மனைவியாதல் மட்டுமன்றி, இருவரும் மாறிப்புக்கு இதயம் எய்தி, ஒன்றிய உணர்வினாலே ஒருவராதல். இது இயல்பாக அமையலாம்; ஆக்கிக் கொள்ளவும் கூடும்.

ஒருங்கிணைய முடியாத நிலைமைகளே கடுமையானவை.

இதன் தொடர்ச்சியைக் காமத்துப்பால் விளக்குகிறது. காம இன்ப உணர்வு காதலுக்கு வித்திடுவது. அதனால் மனமும் இசையுமாறு, ஒன்றுபடப் பெரும் வாய்ப்புளது. ஒருவரை ஒருவர் இன்ப ஆசையால் - ஐம்புல நுகர்வால் ஈர்ப்பது அது.

**தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே**
**காமத்துக் காழ்இல் கனி.** (1191)

'தாம் விழைந்து காதலித்துக் கைப்பிடித்த கணவரால், தாமும் விழைந்து காதலிக்கப் பெற்ற மகளிரே, காம நுகர்ச்சி என்னும் விதையற்ற கனியைப் பெற்றவர் ஆவர்.

**இணைவிழைச்சு, விழைவு, வீழ்தல்** என்பன பாலுறவும் உள்ளம் ஒன்றும் காதலும் பற்றிய கலைச் சொற்கள்.

இருவரும் சமமாக ஒருவரை ஒருவர் காதலிப்பது மட்டுமன்றி, காம இன்பம் துய்ப்பதிலும் சமமான ஒத்த உணர்வுடையாராதல் வேண்டும். காழ்- விதை. விதையற்ற

கனி முழுவதும் சுவைக்கப்படும். அதுபோல, இவர்களே முழுமையான காம இன்பம் துய்க்கப் பெறுவர் என்பதாம். **''வீழ்வாரின்**(தாம் விரும்புபவரின்) **இன்சொல் பெறாஅது,** (ஓர் இனிய சொற்கூடப் பெறாமல்), **உலகத்து வாழ்வாரின் வன்கணார் இல்'',** (1198). அவ்வாறு வாழக் கல்லினும் வலிய நெஞ்சு (வன்கணார்) உடையவராதல் வேண்டும். அங்ஙனம் வாழ்வது கடினமென்ற தொனி இதில் இல்லையா?

## புலவியும் பரிவும்

மனைவி ஊடுவது கண்டு, அன்புள்ள கணவன் வெறுக்கமாட்டான். மேலும் மேலும் அவள் ஊடுவதற்குக்கூட, அவன் இடங்கொடுப்பான். சிறுசிறு கிண்டல் பேச்சுப் பேசி, அவளை வம்புக்கு இழுப்பான். அவளைச் சிணுங்க வைத்து அழகு பார்ப்பான். அவள் முகம் சிவக்கச் சிவக்க, ஏதாவது குறும்பு செய்வதில் அவன் தனி இன்பம் காண்பான். அவளது பூப் போன்ற கண்கள் துனிக்கவும் பனிக்கவும் பார்த்து, அப் புலவியினால் அவள் கண்ணும் முகமும் காட்டும் அழகில் அவன் இலயிப்பான். இது காதலர்க்கு விளையாட்டு. இது நல்ல பண்புள்ள கணவன்மார்க்கும்கூட, ஓர் எழுச்சிமிக்க அழகைத் தரும் நிகழ்ச்சியாகும்.

**நலத்தகை நல்லவர்க்கு ஏஎர், புலத்தகை,**
**பூ அன்ன கண்ணார் அகத்து.** (1305)

புலவியால் மகளிர் அழகு கூடுமாம்; பூ அன்ன கண்கள் சிவந்து காட்டிப் பொலிவூட்டுமாம். அத்தகைய 'புலத்தகை (புலவியால் பெறும் அழகு) பூ அன்ன கண்ணா

ரகத்து'; நலத் தகை - நற்பண்புகளால் தகுதி பெற்ற நல்ல ஆடவர்கள் அவ்வாறு புலவிக்கு இடமளிப்பராம். அது அழகுக்கு அழகுதரும் நிகழ்வாகுமாம்.

ஆண்கள் கல்மனம் படைத்தவர்களாதல் கூடாது. தம் காதலியர் ஊடும்போது, அப் புலவியைத் தீர்க்க முயலும் நல்ல அன்பு மனம் வேண்டும், இன்றேல் முன்பே வாடிப்போன கொடியை, வேரில் அறுத்து விடுவதற்கு ஒப்பாகும்.

**ஊடியவரை உணராமை - வாடிய**
**வள்ளி முதல்அரிந் தற்று.** (1304)

ஊடிய மகளிரை உணராமை (உணர்த்துதல் - ஊடல் தீர்த்தல்) ஆண்களுக்கு அழகன்று. அவளைச் சமாதானப் படுத்தி அன்பை மிகுவித்து, ஆறுதல் தருவது கணவனின் கடமை. **வள்ளி** - கொடி. **முதல் அரிதல்** - வேரை அறுத்தல்.

அன்புநீர் பாய்ச்சி வளர்க்கவேண்டிய, காதற்கொடியின் வாட்டத்தைத் தீர்க்காமல், அதன் அடிவேரினை அறுப்பது போல் நடப்பது ஆண்களுக்கு அழகன்று. முன் சுட்டியது போல், அவர்தம் ஊடலைக் கண்டு மகிழ்ந்து, அதற்கு இடம் தந்து, இன்புறுத்துவதே ஆடவர்க்குப் பெருமையும் அழகுமாகும்.

காதலின்ப வாழ்விலும் நம் பேராசான் காட்டும் சீரிய வழிகள், சிறந்த பாலியற்கல்வியாதலைக் கற்றுத் தெளிதல், உலகக் காதலர்தம் கடமையாகும் எனலாம்.

## ஆறுதல் மொழிகள்

திருவள்ளுவப் பேராசான் துன்புறுவார்க்கும் அல்லற்படுவார்க்கும் ஆறுதல் மொழிகள் கூறுகின்றார்.

அவரது இரக்க உணர்வுக்கும் மானுட நேயத்திற்கும் இவை சிறந்த சான்றாகின்றன. ஒருவர் தமக்குக் கேடுவந்த காலத்தும், அதை ஓர் அனுபவமாக எடுத்துக் கொள்ளலாம். ஒருவர் செல்வராக இருக்கும்போது, பலாப்பழத்தில் ஈப்போலப் பலரும் மொய்ப்பர். வறுமை வந்துவிட்டால் **'அற்ற குளத்தின் அறும் நீர்ப் பறவைபோல்'** ஓடி ஒதுங்கி விடுவர். நீரற்ற குளத்தைவிட்டு, நீர்ப் பறவைகள் முன்னதாகவே நீங்கிப் பறந்து போய்விடும். இதுதான் உலகியல்.

ஒருவனுக்கு வறுமையோ, பிறவாறு கேடோ வந்தபோது, ஒட்டி உறவாடிய பலர் நீங்கிவிடுவர்; ஒரு சிலரே பழைமையை விடாது ஒட்டிக் கொண்டிருப்பர். இவ்வுண்மையை அறிய அக் கேடு, உதவுகிறதல்லவா? அதை எண்ணி ஆறுதலடை என்பார் போல், ஆசான் பேசுகிறார்.

**கேட்டினும் உண்டுஓர் உறுதி, கிளைஞரை**
**நீட்டி அளப்பதுஓர் கோல்.** (796)

கேடும் ஓர் அளவுகோலாகுமாம். எதற்கு?

நீட்டி நன்றாக - துல்லியமாக அளப்பதற்கு!

யாரை? நண்பர்களை, உற்றார் உறவினராம் கிளைஞரை.

எவ்வாறு? ஒருவனுக்குக் கேடு வந்த இடத்தும், அக் கேட்டால் ஒரு நல்ல பயன் உளது. அது தன் சுற்றத்தாரை, அவர்கள் எந்த அளவு தன்னிடம் அன்புடையவர்களாக

இருக்கின்றார்கள் என நீட்டி அளந்தறிதற்கான ஓர் அளவு கோலாகும்.

கேடுவந்ததும் ஒருவர் ஒருவராக நீங்குவர். ஒட்டாமல் சிறிது சிறிதாக விலகுவர். அவர்களின் அன்பை, நன்கு முழம்போட்டு, அளக்கலாம் என்பார். 'நீட்டி' அளக்கும் நீட்டலளவையைக் குறித்துள்ளார்.

உண்மையன்புடையாரே இறுதிவரை ஒட்டியிருப்பர். இதைக்கண்டு மன ஆறுதலடையலாம்தானே?

## அழக்கொண்ட எல்லாம் அழப்போம்

ஒருசிலர் தம் உடைமைகளையெல்லாம் பிறர் சுரண்ட-களவாட-கொள்ளைகொள்ள-தந்திரத்தால் கவர்ந்து கொள்ளக் கண்டு, எதுவும் செய்வதறியாது அழுது புலம்புவர். உலகில் இத்தகைய அவலங்கள் பல நெடுக நேர்கின்றன.

தீயவழிகளில் செல்வம் சேர்ப்பவர்களைப் பற்றியது இது. என்றாலும் சுரண்டப்படுபவர்களும் கொள்ளை கொடுப்பவர்களும் ஆறுதலடையவும் இது உதவுகிறது.

**அழக்கொண்ட எல்லாம் அழப்போம்; இழப்பினும்**
**பிற்பயக்கும் நற்பா லவை. (659)**

பிறர் அழுமாறு தீய வினைகளைச் செய்து, அவரிடமிருந்து கொண்ட செல்வமனைத்தும் பிற்பாடு தான் அழுது புலம்புமாறு கைவிட்டுப் போகும். நல்ல வழிகளில் பெற்ற செல்வத்தை இழக்கநேர்ந்தாலும் பிற்பாடு அவை திரும்ப வந்து, உரிய நன்மையைப் பயக்கும்.

ஊழல்செய்து, ஊர்ப்பணத்தைக்கொள்ளையடிப்பவர்கள் நினைவிற்கொள்ள வேண்டியதும் இதுவே. தவறான வழிகளில் மட்டுமல்லாமல், ஒருவர் அழுமாறு அவரை ஏமாற்றிச் செல்வத்தைச் சேர்ப்பவன், பிற்பாடு தான் அழுமாறு இழக்க நேரும் என்னுமிது, அறநெறியில் நம்பிக்கையுடையவர்களுக்கு ஆறுதல் தரும் செய்தியாகும்.

உலக நடைமுறையிலும் இதைக் கூர்ந்து, கவனித்து அறியலாம். அழுவது என்பது ஏதோ ஒரு வகையில் கலங்கித் தவிப்பது. வன்முறையாளர்கள் என்றோ ஒருநாள் வன்முறைக்கே பலியாகிறார்கள். தீய வழிகளில் பொருள் குவிப்பவர்கள், எத்துணை மேலிடத்திலிருந்தாலும் உள்ளுள் அழுது தவிக்கவே செய்கிறார்கள்.

இதுவே மானுடம் ஓரளவு ஆறுதலடையும்படியான நிகழ்வு. இன்றேல் **'மண்புக்கு மாய்வது மன்'** என்று உலகம் மண்ணுட் புகுந்து மடிந்து ஒழிய நேரும்.

## மக்களைக் கண்ணீர்விட்டு அழ வைக்கலாகாது

ஆள்வோர், அதிகாரிகள், கையூட்டு வாங்கும் அரசு அலுவலர்கள் மக்களைப் பிழிந்து எடுப்பதுபோல், ஒவ்வொரு படியிலும் பணம் பறிக்கின்றனர். ஏழை எளிய மக்கள் கண்ணீர் விட்டுக் கதறி அழவும் குடும்பம் குடும்பமாகச் சாகவும் காணும் இத் திருநாட்டில், அரசியல் தலைவர்கள் ஆயிரம் கார்களில் பவனி வருகின்றனர். ஆடம்பரத்திற்கோர் அளவில்லை. கோடிகோடியாக மக்கள் பணத்தைக் குவித்து, அப் பணத்தைக் கொண்டே

அனைவரையும் அடக்கி, நீதிக்கும் பணம் கொடுத்துச் சாய்த்து, யானைகளின் மேல் ஊர்வலம் போகின்றனர்.

**அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண்ணீர் அன்றே**
**செல்வத்தைத் தேய்க்கும் படை. (555)**

அரசன் (ஆள்வோன்) நீதிமுறை தவறியமையால் துன்பப்பட்டுப் பொறுக்கமாட்டாது அழுத மக்களின் கண்ணீர், அரசனது ஆட்சிச் செல்வத்தைத் தேய்த்து ஒழிக்கும் படையாகும்.

கண்ணீர் படைக்கலம் ஆகுமா? ஆகும்! **உலகப் புரட்சிகள் பல மக்களின் கண்ணீரின் விளைவுகளே.** இதை உலக வரலாற்றால் அறியலாம்.

அன்றாடக் குடும்ப நிகழ்வுகளிற்கூட, ஒருவரை அல்லற்பட்டு ஆற்றாது அழவைத்தால், அவ்வாறு அழவைப்பவன் கெட்டழிவான் என்பதையும் இது உணர்த்துகிறது. கண்ணகியின் கண்ணீர் என்ன செய்தது?

**மெய்யிற் பொடியும்**
**விரித்த கருங்குழலும்**
**கையில் தனிச் சிலம்பும்**
**கண்ணீரும் - வையைக் கோன்**
**கண்டளவே தோற்றான் அக்**
**காரிகை தன் சொற்செவியில்**
**உண்டளவே தோற்றான் உயிர்.**

என்பது சிலம்பில் ஒரு தனிவெண்பா. அக் கண்ணீரைக் கண்டதும் மன்னன் உயிர் துறந்தான்; மதுரையும் எரியுண்டது.

உலகில் யாரையும் அல்லற்பட்டு ஆற்றாது அழ வைக்காதீர்! என்று வள்ளுவம் அறைகூவி, எச்சரிப்பது போலவும் இஃதுளது.

**உலகிற்கு நீ வழங்கிச் செல்வது எது?**

திருவள்ளுவர் ஒரு வினாவை எழுப்புகிறார். இதற்கு விடைகண்டால், கோடி வெண்பொற்காசுகள் கிடைத்தது போல இருக்கும்! **'இந்த உலகில், இறந்தாரை எண்ணிக் கொண்டற்று'** என்பார் ஓரிடத்தில். இவ்வுலகில் தொன்றுதொட்டுப் பிறந்து இறந்தவரை எண்ண முடியுமா? பெரும்பாலோர் அவரோடு எல்லாம் போனதெனப் போய் மடிவர். ஆனால் சிறந்தவர்கள், சான்றோர்கள், நல்லவர்கள் தங்களுக்குப் பிறகும் இவ்வுலகில் ஏதேனும் ஒரு நல்லதை விட்டுவிட்டுப் போகின்றார்கள். விஞ்ஞானிகள் தம் கண்டுபிடிப்புக்களை விட்டுவிட்டுப் போகின்றனர். அதனால் உலகம் ஒளி பெற்று, மேன்மேல் உயர்ந்து வாழ்கிறது. இலக்கியப் படைப்பாளிகள் உலகம் வியக்கும் படைப்புக்களை விட்டுவிட்டுப் போகிறார்கள். உலகம் அவற்றில் திளைத்து இன்புற்றுச் சிறக்கிறது. கலைஞர்கள் விட்டுவிட்டுப் போன கலைகளாலேதான், தஞ்சைப் பெருவுடையார் கோபுரம் போன்றவை தலைநிமிர்ந்து நிற்கின்றன.

அன்பனே! நீ எதை விட்டுவிட்டுப் போகப் போகிறாய்? உன் எச்சம் என்று, உனக்குப் பிற்பாடும் இங்கே எஞ்சி நிற்கக் கூடிய ஏதாவது ஒன்றை நீ விட்டுப்போக எண்ணுகிறாயா? இறந்தாரை எண்ணிக் கொண்டற்று என்று அந்த எண்ணற்ற எண்ணிக்கையில் சேரப் போகின்றாயா?

அல்லது ஏதாவது நல்லது ஒன்றை, உனக்குப் பிறகும் இவ்வுலகில், எஞ்சிநிற்குமாறு விட்டுவிட்டுச் செல்ல நினைக்கிறாயா? சொல் மகனே! எச்சம் என எதை விட்டுவிட்டுப் போக எண்ணுகிறாய்?

இக் கேள்விக்கு ஆறறிவு படைத்த, மாந்தராகப் பிறந்த ஒவ்வொருவரும் விடை தேட வேண்டும்.

வள்ளுவரின் வினா இது? கருத்துள்ள கேள்வி! விடையை எதிர்பார்க்கவில்லை அவர்; விளைவை எதிர்பார்க்கிறார்.

சிறந்த சொற்பொழிவையல்ல அவர் எதிர்நோக்குவது; செயலை! இவ்வினாவிற்கான விடை உங்கள் செயலாக இருக்கட்டும்.

**எச்சமென்று என்எண்ணுங் கொல்லோ ஒருவரால்**
**நச்சப் படாஅ தவன். (1004)**

யாருக்கும் எதையும் ஈந்தறியாததால், யாருக்கும் எந்த நன்மையும் செய்தறியாததால் ஒருவராலும் விரும்பப் படாதவன், தான் இறந்த பிறகு, இங்கு தன் எச்சமாக நிற்பது அல்லது தன் எச்சம் (எஞ்சி நிற்பது) என விட்டுச் செல்லக் கூடியது இது என்று எதை எண்ணுவானோ?

இந்த உலகில் பிறந்தவன், பயனுடைய ஏதேனும் ஒன்றையேனும் இவ்வுலகிற்கு விட்டுச் செல்ல வேண்டும் என வள்ளுவர் கருதுகிறார்.

இந்த உலகில் நாம் பிறந்தோம். இந்த மண்ணில் நாம் உலவினோம். இங்கு நாம் வளர்ந்தோம்; வாழ்ந்தோம்;

அல்லற்பட்டோம்; ஆறுதலுற்றோம்; இன்புற்றோம்! அத்தகைய இவ்வுலகிற்கு நாமும் ஏதாவது விட்டுச் செல்ல வேண்டாமா? **'நன்றி மறத்தல் நன்றன்று'** அல்லவா?

பாரில் பிறந்த மாந்தரினம் இப் பாருக்குப் பயன்பட வாழவேண்டுமென்பதை, நம் தெய்வத் திருவள்ளுவர் எத்துணை இரக்கவுணர்வோடு, வினாப் போலத் தொடுத்துள்ளார்! எண்ணிப் பாருங்கள்! மீண்டும் நினைவு கொள்ளுங்கள்; ''எச்சம் என்று எதனை எண்ணுகிறீர்கள்?'' உங்களுக்குப் பிறகும் இந்த உலகம் இருக்கும்! அந்த உலகில் நீங்கள் விட்டுச் சென்ற ஒன்றும் இருத்தல் வேண்டாமா?

# தமிழண்ணல்
# எழுதிய
# திருக்குறள் நூல்கள்

***திருக்குறள் நுண்பொருளுரை*** ரூ.120

தமிழர் பண்பாட்டுப் பின்னணி,
திருவள்ளுவர் காலச் சூழ்நிலை,
தொல்காப்பியம் சங்க இலக்கியம்
ஆகியவற்றின் மரபுகள்,
தமிழர் நாகரிகப் பிழிவாகவும்
அடையாளமாகவும் திகழும்
தனித்தன்மைகள் - ஆகிய
இவை அனைத்தையும் மனங்கொண்டு
எழுதியவுரை. மரபு மாறாத செம்பதிப்பு.
குறளுக்குள்ளேயே குறளுக்கு உரைதேடும்
புது முயற்சி இது.

***திருக்குறள் : எல்லோர்க்கும் பயன்படும் தெளிவுரைப் பதிப்பு*** ரூ. 50

***இளைஞர் வாழ்வில் திருக்குறள்*** ரூ. 25

***திருக்குறள் உணர்த்தும் தமிழர் சமயம்*** ரூ. 25

***திருக்குறள் உள்ளொளி விளக்கம்***

*அ) மனக்கவலை தீர்க்கும் மாமருந்து* ரூ. 3

*ஆ) இளைஞனே கடமையை நினைவுகொள் கனவை நனவாக்கு !* ரூ. 3

*இ) திருவள்ளுவரின் மனித நேயம்* ரூ.12.00